# சாயி அமுதம்



அகனி

# சாயி அமுதம்

(மரபுக் கவிதைத் தொகுதி)

அகனி

நூல் விபரம்

தலைப்பு: சாயி அமுதம் (மரபுக் கவிதைத் தொகுதி)
பதிப்புரிமை: ஆசிரியருடையது
நூலாசிரியர்: சி.அ.சுரேஸ் (அகணி)
பதிப்பு: 2011
பதிப்பு விபரம்: முதற்பதிப்பு
மொழி: தமிழ்
அட்டைச்சித்திரம்,வடிவமைப்பு: சயனிகா சுரேஸ்
புத்தகம் வடிவமைப்பு: சி.அ.சுரேஸ்(அகணி)
வெளியீடு:
சி.அ.சுரேஸ்(அகணி)
சாமந்தி இல்லம், ரொறன்ரோ, கனடா
மின் அஞ்சல் : authorakani@yahoo.com
தொலைபேசி : 1 - 416 732 8021
அச்சகம்: கிரபிக் லாண்ட், ரொறன்ரோ, ஒன்ராரியோ, கனடா

Bibliographical Data

Book Title: Sai Amutham (Devotional poems in Tamil traditional poetry style)
ISBN: 978-0-9869016-0-7
Author: S.A.Suresh (Akani)
Edition: First
Year: 2011
Language: Tamil
Copyright: Author
Cover Page art, Design : Shayanika Suresh
Book Design: S.A.Suresh (Akani)
Publication:
S.A.Suresh
"Samanthi House", Toronto, Ontario, Canada
Email : authorakani@yahoo.com
Phone : 1- 416 732 8021
Printers: Graphic Land, Toronto, Ontario, Canada

# பொருளடக்கம்


படையல்.................... 8

ஆசியுரை.................... 9

அணிந்துரை .................... 10-15

வாழ்த்துப்பா .................... 16-17

வாழ்த்து மடல்கள்.................... 18-20

முன்னுரை .................... 21-25

சாயி-பஞ்சபுராணங்கள் .................... 26-28

சாயிப்பதிகம்

சாயிவாசகம்

சாயி-இசைப்பா

சாயிப்பல்லாண்டு

சாயி-புராணம்

சாயி-புகழ் .................... 28

காப்பும் களிப்பும் .................... 29

காப்பு

களிப்பு

கணபதி வணக்கம் .................... 30-31

கணபதி தெய்வம்

கணபதிக் கடவுளே

கணபதியே துயரங்கள் களைந்திடுவாய்

ஆனைமுகக் கடவுளே

சாயி கீர்த்தனைகள் .................... 32-44

பிள்ளையார் வணக்கம்

மனம் நிறைகிறதே

கலியுக அவதாரர்

வணங்காத நாளில்லை

உன்னைச் சரணடைந்தேன்

பகவான் தரிசனமே

நினைப்பாய் மனமே

கவியில் வல்லோனே

மன்னிக்க வேண்டுகின்றேன்

தவிக்கின்ற உறவுகளைக் காப்பாய்

நன்றி சொல்கிறேன்

சத்திய சாயி பகவானே
கனவினில் வருவாயோ
**சத்திய சாயி வணக்கம் ........................................................ 45-59**
ஆனந்த பாபாவே
பங்கஜ ரூபனே
சக்தி-சித்தி-முக்தி
சாயி அமுதம்
சாயி நாதனே போற்றி!
பகவானாய்ப் பூக்கிறாரே
வேலவனாம் பகவானே
இறைவர்
அன்பே தோற்றமாய்
சத்தியசாயி
சர்வ ரூபனே
மூர்த்திபவனே
அற்புத நாதனே!
சரணம் சரணம்
தத்துவ நாதா
பகவான்
அன்பினால் நிறைந்த பாபா
இன்பமே அளிக்கும் சாயி
சாயிமாதா
சத்தியமே உருவாக
பத்தரின் வள்ளலார்
நலத்தைத் தருவார் பாபா
சிவசக்தியரே
எம்சாயி ஜெய! ஜெய!
பகவானே
சாயியை வாழ்த்துதும்மே
அன்பு
உலக வேந்தன்
நவமுத்து நாதனவர்
மனத்தால் ஒப்பிலாரே
உதவிடுவாரே
நம்சாயி வேண்டியே கும்மியடி
ஒப்பிலா தெய்வமே
சத்திய சாயி கனவில் வருவார்

சீரடி பாபா வணக்கம் ........................................................ 60
சீரடி
சீரடியாய் வந்து
சர்வ மதம் ........................................................................................ 61
எல்லா மதமும்
சமயம் ஒன்றெனும் பகவான் பாபா
தெய்வத்தாய் ஈஸ்வரம்மா .................................................... 62-63
உத்தமி ஈஸ்வரம்மா
மணமகள் ஈஸ்வரம்மா
உயர்ந்தாரே ஈஸ்வரம்மா
கடவுளின் பக்தை
ஈசன் தொழுது
இகத்தில் உயர்ந்தார்
தெய்வத்தாய்
சாயி பிறப்பு ........................................................................ 64
பந்தளவு நீலவொளி
சத்தியா நாமத்தில்
பால பகவான் ........................................................................ 65-66
சுப்பம்மா
கடவுளர் சத்தியா
வெங்கப்பா ராஜா
சத்தியா பாலனாக
பதினான்கு வந்திட
எல்லோரும் பர்த்திக்கு
சாயி அவதாரப் பெருமை .................................................... 67-76
வல்லவர் சாயிபாபா
எங்கள் பகவானார்
கண்ணனாய் வந்துதித்த
தரிசனம் காண
மனிதமாம் சேவையை
சத்தியம் தர்மமும்
சிறுவரின் வாழ்வு
கலியுகத்தில் சாயி

பகவான் அவதாரர்
என்றும் குருவாய்
சேவையின் மூலம்
சித்ரா வநதி
நத்தாரில்
நித்தமும் நிற்பாரே
கோடியாய்ப் பக்தரை
அற்புத ஆண்டவனாய்
கோபாலா
எங்களில் பாபா
சித்தராம் சாயி
அற்புதன்
சாயீசன்
கோபாலன் சாயி
பாரினில் தெய்வமே
நல்லதைச் செய்துமே
சுந்தர சாயியின்
**சாயி போதனைகள் ........................................ 77-81**
மனிதப் பெறுமதிகள்
நன்மை
அன்பு
செயல்
மானிடச் சேவை
இறைவன்
உணர்வு
அன்பு ஒளியாக
அமைதியும் பக்தியும்
நம்பிக்கை
எண்ணமும் செயலும்
வழிநடத்தும் சாயி
பக்தியும் செயலும்
சேவை

பஜனையில் அன்பு
அகச்சுத்தி
பாபாவின் அறிவுரைகள்
ஆன்மீகத்துணை
பக்தி
பேராசை வேண்டாமே
உயர்ந்து வாழ்வோமே!
தெய்வமாய் நிற்பாரே!
சாயி விந்தைகள் ........................................ 82-88
நாதன் பகவான்
ஸ்ரீ சத்திய சாயியின் பவனி
பார்த்தது கனவே
கனவு நிகழ்வானதே
லீலைகள்
சாயியருள்
பார்த்தியில் சாயி
பன்னிரண்டு பக்தரிடம்
இனிதாய் அருளை
பாரில் புகழுற
இறைவனின் லீலைகள்
சத்திய சாயி
நிர்மலன் மாமுகம் கண்டுமே
வாழ்த்து ........................................ 89
நன்றி நவிலல் ........................................ 90-92
நன்றி கூறுகின்றேன்
அருமைத் தந்தையர்



# படையல்

## இன்னிசை வெண்பா

சந்தக் கவிபாடும் சத்திய சாயியே!
எந்தன் கவிதையினை ஏற்றிடச் செய்வாயே!
உந்தன் அருளாலே ஊக்கம் தருவாயே!
சிந்து கவிக்குச்சோ தி.




சாயி
அமுதம்

# ஆசியுரை

ஓம் ஸ்ரீ சாயிராம்!

ஈழமாநகரின் நற்றவப் புதல்வன் சி.அ.சுரேஸ் தனது இளமைக் காலத்திலேயே ஆன்மீக ஈடுபாடு கொண்டவராகவும், கோயில் திருப்பணிகள் செய்வதில் மிகவும் விருப்புடையவராகவும் காணப்பட்டார். அதிகாலையில் கோயிற் திருப்பணிகளை முடித்த பின்புதான் கல்லூரிக்குச் செல்வது வழக்கம்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொண்ட காலத்திலும் அங்குள்ள குறிஞ்சிக் குமரன் கோயிலுக்குச் சென்று திருப்பணியைச் செய்யத் தவறுவதில்லை. எழுத்தாற்றலும் உடையவராக இருந்தார். சஞ்சிகைகளில் அவரது ஆக்கங்கள் வெளிவந்தன.

கனடாவுக்குச் சென்ற அவர் ரொறன்ரோ நகரில் சாமந்தி என்ற இணையத்தளத்தை நடாத்தி அதில் பலரது ஆக்கங்களையும் பிரசுரித்து தனது படைப்புக்களையும் அதில் வெளியிட்டார். கன்னி முயற்சியாக கவிச்சாரல் என்ற புதுக்கவிதை வடிவிலமைந்த நூலினை வெளியிட்டுப் பலரது பாராட்டினையும் பெற்றார்.

மேலும் மேலும் அவரது தொழிற்பாடு வளர்ந்து வந்தது. முறைப்படி இலக்கண வடிவில் அமைந்த நூலினை பகவான் சத்திய சாயி பாபாவின் அற்புதங்களை குறள் வெண்பா, வெண்பா, கீர்த்தனை எனப் பல்வேறு செய்யுள் வடிவத்தில் ''சாயி அமுதம்'' என்ற பெயரில் வெளியிடுகின்றார்.

பக்தி சொட்டும், தேன் கலந்த அமுதமாக அதனை யாத்துள்ளார். அகணி என்னும் புனைபெயருடனேயே எழுதி வருகின்றார். ''அகணி'' என்பதில் பெற்றோரையும் மகிமைப்படுத்தும் வகையில் அமைத்துள்ளார்.

அகணியின் தெய்வ சிந்தனை மென்மேலும் வளர்ந்து, இன்னும் பல தெய்வீகப் பாடல்களை எழுதி உலகிற்குத் தந்திட எல்லாம் வல்ல பகவான் சாயி அருள் புரிவார் என்று ஆசி வழங்குகின்றேன்.

''முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்''

அ.இரமேஷ்

மெல்பேர்ண், அவுஸ்திரேலியா

மார்ச், 2011

# அணிந்துரை

''சாயி அமுதம்'' என்ற மரபுக்கவிதை நூல் ஆக்கியோன் திரு.சி.அ.சுரேஷ் எனும் கவிஞன் ஆவார். அவர் புனைபெயர் ''அகணி''. அகணி என்பது மருதநிலம், வயல் போல்வன கருதுமாதலினாற் போலும் அவரின்கவிதையிற் பசுமையும், நல்விளைச்சலும், செம்பொருளும் நன்கு தெரிகின்றன. அவர் இக்கவிதை நூலை மீள்பார்வைக்காகவும், அணிந்துரை எழுதும்படியும் கேட்டபோது அளவிலா ஆநந்தம் அடைந்தேன். 2010ம் ஆண்டில் யானும் கவிஞரையா திரு கந்தவனமும், மரபுக்கவிதை எழுதும் முறையாகிய யாப்பிலக்கணத்தையும், கவிதை நயம் கூறும் அணியிலக்கணத்தையும் கவிதை வட்டத்தில் கற்பித்தோம். இதற்குத் தமிழர் கனடிய தமிழர் எழுத்தாளர் இணையத்தலைவர் திரு.த.சிவபாலு ஆதரவு தந்தார். இந்தக் கவிதை வட்டத்தை நடாத்துவதற்கான இட வசதியை வீடு விற்பனை முகவர் திரு. கரு. கந்தையா அவர்கள் தனது தமிழ்ப்பற்றனுதாபத்தால் தந்துதவினார். இந்தக் கவிதை வட்டத்திற்கு தமிழ்க்கவிதையியல் கற்கப் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்றோர் வந்தனர். அவர்களில் ஒருவரான ''சாயி அமுதம்'' நூல் ஆசிரியர் திரு சி.அ.சுரேஷ்(அகணி) பொறியியலாளரும் இங்கிலாந்துப் பல்கலைக்கழகமொன்றில் கணினித் துறையில் முதுமாணிப் பட்டமும் பெற்றவர் ஆவார். அவர் ஆசான்களில் ஏற்பட்ட நன்றிப் பெருக்காலும், ஸ்ரீ சத்திய சாயி பாபா மீது நான் கொண்டுள்ள நம்பிக்கையைப் பற்றி அறிந்து கொண்டதாலும் இவ்வரிய நூலின் அணிந்துரையை எழுதக்கேட்டார் போலும்; நன்றி.

''சாயி அமுதம்'' எழுதிய ஆசிரியர், இந்நூலைத் தாம் கற்ற யாப்பிலக்கண, அணியிலக்கண வழிநின்று எழுதியுள்ளார். மரபுக்கவிதைகள் எழுதுவோர் மிகமிகக் குறைவு. அவ்வாறு எழுதினாலும் ஒருவகைப் பாவிலோ, அல்லது பாவினத்துள் வரும் விருத்தப்பாக்களிலோ எழுதுவர். ஆனால் திரு.சுரேஷ் அவர்கள் தான் யாப்பிலக்கணத்தில் கற்ற பாக்கள், பாவினங்கள், அதன் வழிவந்த சிந்து, கும்மி, வண்ணம், தெம்மாங்கு போன்ற

பல்வகைச் செய்யுட்களிலும், ஸ்ரீ சத்திய சாயி புகழ் பாடியுள்ளார். மேலும் பல கீர்த்தனைகள் பாட, இராக, தாள வகைகளும் சங்கீதம் தெரிந்தவர்களைப் பாடச்செய்து பயன்பட எழுதியுள்ளார். இந்நூல் அவர் பட்டறிவும், இதயதாகமும், பக்தி அநுபவங்களும் உந்து கோலாக அமைய எழுதப்பட்ட பக்திச் சுவை சொட்டும், அமிர்தமாம் பாடல்கள் நிறைந்த நூலாகும். ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் வரலாறு, லீலைகள், அத்வைத தத்துவம், சமய சமரச சன்மார்க்கம், உளநிறைந்த மனிதப் பணி, தெய்வீகப் பணி போல்வனவும், ''மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை'', அதுவே வீடுபேறு தருமென்பதும், பகவத் கீதையின் சாரமாகிய இறைவனில் சரணடைவதே, சிறந்த பக்தி முயற்சி என்பதும் கூறியுள்ளார். இவர் பாடல்கள் எல்லாம் எளிமையும், செழிமையும், பொருண்மையும் நிறைந்தன. எனக்கோ, கவிஞரையா கந்தவனம் அவர்களுக்கோ இந்நூல் பெரும் பேறு என்போம். ''ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்'' (குறள் மக்கட்பேறு 69) தன்மகனைக் கல்வி கேள்விப் பண்புகளால் சிறந்த சான்றோன் என ஊரார் பேசக்கேட்ட தாய், அவனை ஈன்ற பொழுதை விட மிகவும் ஆநந்தம் அடைவாள். அத்தாயின் உவப்புப் போல, எமது வழிகாட்டலில் கற்ற மாணவன் திரு. சி.அ.சுரேஷ் இந்த நிறைவான அறம், பொருள், இன்பம் வீடுபேற்றின் வழி, ஒளி, தெறி தரும் நூலைப் பயன்பட எழுதியது எமக்குப் பெருமகிழ்வாகும். ''படையல்'' என்ற பகுதியிலே எழுதப்பட்ட இன்னிசை வெண்பா கூறும் வேண்டுதல் உள்ள நிறைவின் ஓர்ப்பைக் காட்டும்.

”சந்தக் கவிபாடும் சத்திய சாயியே
எந்தன் கவிதையினை ஏற்றிடச் செய்வாயே
உந்தன் அருளாலே ஊக்கம் தருவாயே!
சிந்து கவிக்குச்சோ தி.”

ஸ்ரீ சத்திய சாயியிடம், நாதத்தில் மகிழும் சத்தியா என்னுடைய கவிதைகளையும் ஏற்கச் செய்வீர் என இறைதாள் பணிந்து கேட்கிறார். அருள் இருந்தாலே ஊக்கம் வரும். எனது கவிக்குச்சோதி தா என வேண்டுவது, சோதி மயமானவர் இறைவன், அக புற நிலைக்குச்சோதி, அறியாமை என்னும் இருளகற்றச்சோதி, எல்லா

**மதங்களும் சோதி வழியே வழிபடுகின்றன என்ற பல்கருத்தும் இழைய இறைவனுக்குப் படைத்து வேண்டுதல் செய்கிறார்.**

**சத்தியாவின் வரலாறு எழுத முனைந்த போது அன்னாரின் தாய் ஈஸ்வரம்மா பற்றி எழுதிய வெண்பாவில் ''ஓம்'' என்னும் நாதப்பொருள், ஈற்றுச் சீராக அமைகிறது. உயர்ச்சி ''ஓம்'' என்ற ஆன்மலயப் பொருளில் உண்டெனக்கூறிச் சிந்தனையைத் தூண்டுகிறார். பகவான் தனது தாயாரைப் பிறப்பிற்கு முன்பே தேர்ந்தேன் எனக்கூறும் நேரிசை வெண்பா:**

"எந்தன் பிறப்பினை என்னுடைய அன்னையை
முந்தியே தீர்மானம் முற்றாகத் - தந்தேனே" **என்று கூறுவது பகவானின் தீர்க்க தரிசனம் கூறும் திவ்ய நிலையாகும்.**

"நத்தாரில் வெண்ணுடையில் நாயகனாய் நின்றுமே
உத்தம சர்வமத உண்மையைப் - பத்தருக்கு
அத்தம் அமுதமாய் ஆநந்தம் என்றெல்லாம்
சொத்தாக நிற்பதுவே சொல்."

**மேலேயுள்ள நேரிசை வெண்பாவிலே, சர்வ சமய சமத்துவக் கருத்துக் கூறியது மட்டு மல்லாது, எச் சமயமும் போற்றும் ''சொல்'' வார்த்தை என்ற கிறிஸ்த்தவத் தத்துவத்தையும், மனுதர்ம நெறி கூறும் இறைவனின் ''நாரா'' என்ற ஆதிநிலை நாதவொலியையும், பல்பக்கநெறி கூறும் பக்குவ தத்துவத்தையும் காட்டி நிற்கிறது. இவர் எழுதிய கலிவெண்பா, பஃறொடை வெண்பா போல்வன, ஆழ்ந்த சமயத்தத்துவங்களை, பகவான் தரிசனையில் பெற்ற தன்னனுபவங்களையும் காட்டும் சொல்லோவியமாகத் தருகின்றன.**

**இவர் எழுதிய கலிப்பா, கட்டளைக் கலிப்பா பக்திச் சுவை சொட்டும் தேனாறு. சந்தநயம் கூறும் தாளலயச் செம்பொருள் சிந்தனைமுத்து. அவை எல்லாம் தொட்டுக் காட்ட ஆசையேனும், அவற்றை அறிந்து, வாசகராகிய நீங்கள் அதன் பல்சுவையையும், சந்தம் பொருள் தரும் அற்புத ஓசையுணர்வையும் அறிய விட்டு விடுகிறேன்.**

**புலவோர், வஞ்சிப்பா தளை அடிகளால் வஞ்சிக்கும் பா எனக் கூறினும், அப்பாக்கள் இவர் கவிதையில் வஞ்சிக்கவில்லை. இவர் பாபாவின் வாழும் தத்துவங்களைப் பொதிந்து கூறும் நல்லிசைப் பொக்கிஷமாக எழுதியது இலக்கிய காரருக்கும், ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பக்தருக்கும், ஏனையோருக்கும் என்றும் சிந்தனையைத் தூண்டும்.**

**பாவினத்தின் வகைகளுள் எழுதிய பல்வேறு சீர் எண்ணிக்கையில் எழுதிய விருத்தப்பாக்கள் உள்ளத்தில் நின்று உவகை நடம்புரியும்.**

"அன்பினால் நிறைந்த பாபா
அனைத்தையும் பிணிக்கும் பாபா
இன்முகச் சிரிப்பால் பாபா
இதயத்தைக் காண்பீர் பாபா
மென்மையாய் உரைக்கும் பாபா
மொழிகளே முழுமை பாபா
என்றுமே மறவேன் பாபா
இதயமே வணங்கும் சத்யா"

**என்ற விருத்தப்பா வாசிக்குந் தோறும் இதயத்தில் இன்பத்தொனி எழுப்பி இலகுவில் மனனம் ஆகிறது. கட்டளைக் கலித்துறை, கலித்தாழிசை, கலிவிருத்தம், வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை ஆகியன யாப்பிலக்கணம் கற்பவருக்கு எளிமையான சொற்களை, இனிமை ததும்பப்பாடி இன்கவிதைகள் என்பதறிய என்றும் மகிழ்வுதரும் கானாறு ஆகின்றது. இதற்கு அணிந்துரை எழுதும்போது கலாசாரம் பற்றிப் பேசியும், எழுதியும் வரும் நண்பர் எமது சுகயீனத்தைப் பார்க்க வந்திருந்தார். மேசையிலிருந்த இந்நூலை எடுத்துப் பார்த்தவர், என்னோடு பேசுவதை விட்டுப் புத்தகத்தை வாசித்துக் கவிதைகளின் எளிமையையும், இனிமையையும் கூறும் வகையினையும் எனக்கும் சில பாடல்களைக் காட்டித்தான் வந்த நோக்கம் மறந்து, சாயி அமுதம் பற்றியே பேசினார். திரு சி.அ.சுரேஷ் எழுதிய வண்ணம், அந்தாதி, தெம்மாங்கு,மருட்பா, சிந்து ஆகியவற்றிலிருந்து, ''வண்ணம்'' வகைகூறும் கவிதை ஒன்றினை மட்டும் கூறி, எனது அணிந்துரையை எழுதி முடிக்க விரும்புகின்றேன்.**

”தக தக வெயிலிலும்
சட சட காற்றிலும்
சல சல நீரிலும்
நில நில வானிலும்
நிலவிலும் இருட்டிலும்
நலத்தை அருள்வார் பாபா”

**என்று இயற்கைப் பொருளில் இறையைக் காணும் மாண்பு மகத்தானது. கீர்த்தனைகள் பகவான் சந்நிதியில் பாட எழுதப்பட்டவை. இவரின் மனைவி ஜீவநந்தினி, பிள்ளைகள் சயனிகா, கிரிசன் அனை-வருமே பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பக்தர்கள். அவர் மகள் சயனிகா சுரேஷ் அழகான முன்னட்டைச் சித்திரம் வரைந்துள்ளார், அவரின் அன்னையும் தந்தையும் இசைபாடுள்ள மனித மாண்புள்ளவர்கள், சகோதரி இசை ஆசிரியையாக கீர்த்தனைகளுக்கு இராகம், தாளம் அமைத்துள்ளார். நூலாசிரியரின் இனிய பண்பு எல்லோருக்கும் "நன்றி நவிலுவது". இவையெல்லாம் கவிதை வாயிலாகக் கூறியுள்ளார். இவர்**

”உள்ளத் திருப்பவர் பகவான் - அவர்
இன்பக் கவிதையின் ஊற்று
தெள்ளு தமிழெனும் தேனில் - தேர்ந்து
தெவிட்டத் தருபவர் பாபா”

**என்று எழுதி தொகுத்துக் கூறும் பொருளாக அறம், செம்பொருள், இன்பம், வீடு, பேறு பதிக்கும் அவரின் முயற்சியை வாழ்த்தி இறைவன் ஈந்த கவியெழுதும் ஆற்றலால் மனிதம் மேலும் மிளிரப் பயன்படு கவிதைகள் எழுத அவரைக் கீழுள்ள வாழ்த்துப்பா மூலம் மேலும் மனமார வாழ்த்தி இறைவனைப் போற்றுகின்றேன்; நன்றி.**

**(நேரிசை வெண்பா)**

**சர்வம் இறைமயமே சால்பும் அதன்லயமே**
**அர்ப்பணமே ஈசாநின் ஆன்மிகமே - தர்சனமே**
**அன்பு வழியாமே ஆகமமாய்க் காண்கின்ற**
**இன்னினிய சாய்அமுது ஈர்ப்பு.**

சுரேஷின் அநுபவமே சுந்தரமே சாயி
நராயணன் சாயியே நன்கு - சரணமாய்ப்
பக்தர்கள் போற்றிப் பணிசெய்தல் பல்வழியில்
தக்கதே சாய்அமுதம் சார்ந்து.

(அறுசீர் விருத்தம்)

சாயியின் சர்வ கொள்கை
சகலரும் ஏற்கும் சங்கை
ஆயின் அதுவே அங்கை
உணர்விலே ஒன்றே ஓங்கை
சாயியின் அமுதம் சார்கை
அன்பிலே ஓர்ப்பு ஆள்கை
தாய்நாடு கன்றின் சேர்க்கை
ஆய்வதே சுரேஷின் அருண்மை

ம. செல்வராஜா அலெக்ஸ்சாந்தர்
முன்னாள் தமிழ் விரிவுரையாளர்,
இலங்கைத் தமிழ் ஆசிரியர் கல்லூரிகள்
ரொறன்ரோ. ஒன்ராரியோ, கனடா.
மார்ச் 1, 2011.

மனிதனில் உள்ளூறையும் தெய்வீகத்தை வெளிப்படுத்தவே வந்துள்ளேன்
- பாபா

# வாழ்த்துப்பா

எழில்மிகு ஈழம் தன்னில் சுரேஸ்
செழிப்புறு கண்டி மாநகரில் பிறந்தனன்
தென்மராட்சிப் பிரிவில் கொடிகாமப் பதியில்
இன்புற்று இவனும் வளர்ந்து வரும்போது
ஆரம்பக் கல்வியைத் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும்
தரமிறு உயர்கல்வியைச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்
கற்று வருங்காலை ஆன்மீக சிந்தனையுடையான்
நற்றவப் புதல்வன் கொடியூர் ஆட்டுப்பட்டி வைரவர்
வேவில் கந்தசாமி கோயில்களில் தினமும்
அதிகாலை கூட்டித் துடைத்து நீர் தெளித்து
துதிசெய்து பூக்கள் சூட்டிய பின்பே
கல்லூரி செல்வது வழக்கமாய்க் கொண்ட
நல்ல சிந்தனை கொண்டவன் இவனே!
பல்கலைக் கழகத்தில் குறிஞ்சிக் குமரன் கோயிலில்
தொல்வினை அகலத் திருக்கோயில் திருப்பணி
அல்லும் பகலும் அயராது செய்தனன்
பல்லோரும் இவன்பணி கண்டு வியந்தனர்
அக்கால கட்டத்தில் எழுதிய ஆக்கங்கள்
மிக்கவே "நான்" போன்ற சஞ்சிகைகளில் இனிதே
சொக்கும் வகையில் வெளிவந்தன அப்போது
பொறியிய லாளராய்ப் பதவியும் பலஇடங்களில்
நெறிப்படுத்தி ஆற்றிய சுரேசும் கனடாவில்
ரொறன்ரோ நகரில் பணியாற்றிய போது
விட்டகுறை தொட்டனன் எழுத்து உலகினில்
"அகணி" என்னும் புனை பெயருடனே
மிகவே பல்துறை சார்ந்த விடயங்களில்

புதுக்கவிதை வடிவில் இலக்கியப் படையல்
செதுக்கி எடுத்த கவிச்சாரல்
நூல் வெளியீடு சிறப்புறச் செய்தனன்
ஏலவே நினைத்ததைச் செய்து முடிக்கும்
சால்பு கொண்ட "அகணி" என்பான்
சாலவே இதனையும் திறம்படச் செய்து
இலக்கணம் கற்றுமே இலக்கணப் படையலை
ஆன்மீக ஈடுபாடு கொண்ட அன்பனும்
வான்புகழ் கொண்ட பகவான் சாயிமீது
பக்தி பரவசத்துடன் பாடிய குறள் வெண்பா முதல்
முக்தி தரும் கீர்த்தனைகள் யாவுமே
படிக்கப் படிக்கத் தெவிட்டாத கனிரசம்
இடித்து உரைக்கும் நற்போதனைகள்
முடி சார்ந்த மன்னரும் பணிந்தேத்தும்
பக்தி சொட்டும் பாக்களாக யாத்து
முக்தி யடைய வைக்கும் பாபாவின் தரிசனத்தை
கண்டு அனுபவித்து உள்ளம் தன்னிலே
ஈட்டிய இன்ப உணர்வுடன் எழுதி
ஏட்டினில் வடித்து சாயி அமுதமாக
ஊட்டினன் "அகணி" அவன் சால்பு
வார்த்தையில் அடங்காது வாழ்க அவன் புகழ்
உருகி உருகி, கருகி மனமே
கனிந்து பாபாபுகழ் பாடிய பக்தனின்
வரிகள் படிப்போரை நெகிழ வைக்கும்
சாயி அமுதம் வாழ்கவே! அவனின்
ஆன்மீக சிந்தனை வளர்கவே!
"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

\- அ.கனகமணி (மெல்பேர்ண் மணி, அவுஸ்திரேலியா)

# வாழ்த்து மடல்கள்

## ஓம் சாயி ராம்!

இக் கலியுக காலத்தின் அவதார புருஷராக அவதரித்திருக்கும் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அன்பும், கருணையும், இரக்கமும், மகிமையும் அளவிட முடியாதவை. அவரின் பக்தர்கள், உலக மக்கள் எல்லோரும் அதன் உண்மையை அறிந்து பலன் பெற வேண்டும் என்பதற்காகப் பல சேவைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இதில் பகவானின் புகழும், பெருமையும் பாடல்களாகவும். கதைகளாகவும் கவிதைகளாகவும் அமைத்துப் பாடியும் எழுதியும் அளப்பரிய சேவையைச் செய்து வருகி-றார்கள். இதே போல சாயி அமுதம் என்கின்ற இந்த நூலும் பகவானின் சிறப்பை பல கோணங்களிலும் ஆய்ந்து அதை மரபுக்கவிதை வடிவிலே திறம்பட அமைத்த திரு சுரேஸ் அவர்களுக்கு விக்ரோரியாபாக் சாயி சமித்தியின் சார்பாக எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு பகவானின் அருளும் ஆசியும் பெற வேண்டி நிற்கின்றோம்.

- சாயி பாபா சமித்தி விக்ரோரியா ''பாக்'' ரொறன்ரோ,

ஒன்ராறியோ, கனடா.

---

''அகணி'' என்ற புனைபெயரில் தனது எழுத்தாற்றலால் படைப்புக்களை செய்து வரும் மருமகன் சுரேஸ் அவர்கள் ''சாயி அமுதம்'' என்ற நூலை எழுதியிருப்பது பற்றி அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். அவரின் இந்த முயற்சிக்கு எமது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். மேலும் அவரின் பணி தொடர பகவான் பாபாவின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக்குரிய,

- திரு திருமதி ஐயம்பிள்ளை குடும்பத்தினர், கொழும்பு 6,

இலங்கை

அகணியின் ''சாயி அமுதம்'' கவிதைத் தொகுதியில் மலர்ந்துள்ள சில கவிதைகளைக் கண்டேன். அதன் சுவை கண்டு, உண்மையில் அமுதம் உண்டதுபோல் உணர்ந்தேன். சுவை குன்றாத கவிதைகளும், அதன் கருத்து ஆழமும், சாயி பக்தர்களாகிய எங்களை மெய் மறக்கச் செய்துள்ளன. குறிப்பாக சாயி-புகழ் தலைப்பில் வந்துள்ள ''ஆறுதலைத் தேடிவிட'' என்ற கவிதையில் வரும் ''மாறுபடும் மதங்களையே அணைத்திருக்கும் பாபா'' என்ற வரி, இனமத பேதங்களினால் சின்னா பின்னாமாக உடைந்து அல்லல் படும் இன்றைய உலகிற்கு ஒரு அரு மருந்தாக அமைந்துள்ளது. அகணியின் சேவை மேலும் மேலும் தொடர வேண்டும் என்றும் இந்த அரிய படைப்பிற்கு பகவான் சாயி பாபாவின் ஆசிகள் கிட்டுவதோடு பற்பல பக்தர்கள் இந்த அரிய நூலினால் பயனடையவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்

அன்புடன்

பத்மநாதன் தம்பையா, ரொறன்ரோ, ஒன்ராறியோ, கனடா

---

## மனம், வாக்கு, செயல் ஒன்றுபட அமைந்த சாயி அமுதம்

.இந்தச் சாயி அமுதம் ஆன்மீகமும், அருளும், அழகும் கலந்தது. இலக்கண அழகு, இலக்கிய அழகு மட்டுமல்லாமல் இறை அழகும் கலந்தது சாயி அமுதம். மனிதனுக்கு இன்று தேவைப்படுவது அமைதி. அந்த அமைதியை ஏற்படுத்துவதற்கு அகணியின் பக்தி சொல்லும் வரிகள்

சாயி பஞ்ச புராணங்களாக, பக்திப் பாடல்களாக மாறி இருக்கின்றன. பகவான் சொன்னதுபோல் சேவை ஒரு ஆன்மீக சாதனை. அதனை வெறும் உதவி என நினைக்கக் கூடாது. வெறும் ஜெபம், தியானம் மட்டும் ஆன்மீக சாதனையாகிவிட முடியாது. சேவையே மிக உயர்ந்ததும் புனிதமானதும் ஆகும். ''மக்கள் சேவையே மனித நேயம்'' என்று எண்ணும் அகணியை, அவரது படைப்புக்களை இத்தரணியில் பண்போடு வாழ்த்துகின்றேன்.

இறை அருள் என்றும் இவருடன் இருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சிவமோகன், ரொறன்ரோ, கனடா

OM SRI SAI RAM!

It is a pleasure and a God-sent opportunity to send this message to Suresh on the release of his new book. There are thousands of books on Swami in prose. But I am still to see one in Kavithai format in Tamil.

To write Kavithai one must be versatile in the language. But to write about Swami the writer has to be attuned with Swami and His teachings; and above all, he must be blessed by Swami to venture on such a noble task. Suresh has all these and more to embark on this noble and sacred task.

Suresh, whom I know for the last eight years, has been an ardent devotee for a very long period of time. His attempt to follow Swami's teachings to the core is remarkable.

He has also moulded his family in Sai-way of life to such an extent that Swami takes a predominant place in all their dealings and decisions. It is my earnest desire and expectation that Suresh would continue to write more books on Swami and His mission. My prayers to Swami is to bless him with wisdom and ability to achieve this task.

Sai Ram

Dharmarajah, Toronto, Ontario, Canada

# முன்னுரை

## ஓம் ஸ்ரீ சாயிராம்!

கவிதைத் துறையில் எனது கன்னிப் படைப்பாகிய ''கவிச்சாரல்'' என்ற நூல் ஆக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது யாப்பிலக்கணத்தைக் கற்க வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. எனது சுய முயற்சியாலும், சில நூல்கள் மூலமாகவும் நான் கற்க முற்பட்ட போதிலும் அதிக தூரம் என்னால் செல்ல முடியவில்லை. எதிர்பாராத விதமாகக் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் ஒழுங்கு செய்த ''கவிதை வட்டம்'' என்பதில் இணைந்து மரபுக் கவிதையை நன்கு கற்கும் வாய்ப்புக் கிட்டியது. மரபுக் கவிதை ஆக்கத்திற்கான அறிவை அந்தக் கவிதை வட்டத்தினை நடாத்திய பண்டிதர் ம.செல்வராசா அலெக்ஸ்சாந்தர், கவிநாயகர் வி.கந்தவனம் மூலமாக நான் பெற்றதன் மூலம் அவர்கள் என் ஆசான்களாக அமைந்தனர். இவர்கள் இருவருக்கும் நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். மேலும் இதே கவிதை வட்டத்தில் அறிவுரை வழங்கிய கலாநிதி நா.சுப்பிரமணியன் மற்றும் இரா. சம்பந்தன் ஆகியோரையும், அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த எழுத்தாளர் இணையத்தின் தலைவர் த.சிவபாலு அவர்களையும் இந்த நேரத்தில் நன்றியுடன் நினைத்துக் கொள்கின்றேன். மேலும் மரபுக் கவிதையில் எனக்கு ஏற்பட்ட ஆர்வம் என்னைப் பல நூல்களை வாசிக்கும் வண்ணம் ஊக்கப்படுத்தியது.

கவிதை வட்டத்தில் பங்கு பற்றிய பல கவிஞர்களும் பல்துறை அறிஞர்களாக ஒருவருக்கொருவர் உந்து சக்தியாக அமைந்து கொண்டனர் என்பதனால் அவர்களுக்கும் என் நன்றியைப் பதிவு செய்கின்றேன்.

எனது கன்னி வெளியீடான ''கவிச்சாரல்'' நூல் வெளியீடு நிறைவுற்ற நேரத்தில் ''சுரேஸ் அடுத்த நூலுக்கான வேலையை இப்போதே தொடங்க வேண்டும்'' என ஊக்கமளித்து எனது இந்த முயற்சிக்கான ஆதங்கத்தை உருவாக்கியவரும், என்னை சிறுவயது முதல் நன்கு அறிந்தவருமாகிய கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்களுக்கும், என்னைக் காணும்போதெல்லாம் உற்சாகப்படுத்தும் நண்பர் கவிஞர் நவம் நவரத்தினம் ஆகியோருக்கும் எனது நன்றியைப் பகிர்ந்து கொள்கின்றேன்.

இந்த நேரத்தில் பல தமிழ் இலக்கியப் படைப்புக்களை ''மெல்பேர்ண் மணி'' என்ற புனைபெயரில் எழுதி வெளியிட்டதன் மூலம் எனக்கு உந்து சக்தியாக விளங்கிய என் அன்புத்தாயார் திருமதி அ.கனகமணி அவர்களுக்கு அவர் வழியில் மேலும் பல படைப்புக்களைச் செய்வேன் என உறுதி கூறி என் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் இந்த நூலிற்காக எழுதிய கீர்த்தனைப் பாடல்களுக்கு இராகம், தாளம் என்பவற்றைப் பொருத்தமாக அமைத்த நுண்கலைப் பட்டதாரியும் இசை ஆசிரியையுமான என் சகோதரி திருமதி சி. இரமா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இந்த நூலில் உள்ள எல்லாக் கவிதைகளையும் படித்துப் பல ஆக்கபூர்வமான கருத்துக்களையும் தந்து, திருத்தங்களையும் செய்ததோடு வாழ்த்துப்பாவுடன் கூடிய அணிந்துரையையும் வழங்கிச் சிறப்பளித்த பண்டிதர் கலாநிதி ம.செல்வராசா அலெக்ஸ்சாந்தர் அவர்கட்கு சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றேன். மேலும் இந்த நூலுக்காக பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா மீது அளவில்லா பக்தியும், நம்பிக்கையும் கொண்ட என் மூத்த சகோதரர் பொறியியலாளர் திரு.அ.இரமேஷ் ஆசியுரை நல்கிச் சிறப்பித்தமையும், எனது தாயார் திருமதி அ.கனகமணி (மெல்பேர்ண் மணி) வாழ்த்துப்பா வழங்கியமையும், பொன். கணேசலிங்கம் (சாயி பாபா சமித்தி விக்ரோரியா ''பாக்'' சார்பில்), திரு.தர்மராஜா, திரு. பத்மநாதன், திரு சிவமோகன், திரு திருமதி ஐயம்பிள்ளை குடும்பத்தினர் வாழ்த்து மடல்களை வழங்கி ஆதரவு தந்தமையும் எனக்கு மகிழ்ச்சியைத் தந்துள்ளன. சிறுவன் சாயித்திரேன் (Saitheran) பிரான்ஸ் இலிருந்து பகவானின் படம் ஒன்றை வரைந்து அனுப்பி தன் அன்பை வெளிப்படுத்தியமை மேலும் மகிழ்வை ஏற்படுத்தியது. எனது மகள் செல்வி சயனிகா சுரேஸ் அழகான பகவானின் ஒவியத்தை வரைந்து அட்டைப்பட வடிவமைப்பையும் செய்ததை எண்ணி அளவில்லா மகிழ்ச்சி அடைந்தேன். நான் கற்றுக்கொண்ட மரபுக் கவிதை முறையைப் பயன்படுத்தி நான் வணங்கும் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பாதங்களில் சில கவிதைகளைப் படைக்க விரும்பியதின் விளைவாகவே இந்நூல் வெளிவருகிறது.

பல்வகையான பொருளினைச் சுவை தளம்ப அணிநலத்துடன் அழகு மிளிரக் கற்பனைச் செறிவுடன் அமைத்துக் கூறுவதற்குச் செய்யுள் இலக்கணம் பெரிதும் உதவுகின்றது. இந்தச் செய்யுள் நடை மூலம் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை போன்ற தொடையழகோடு கவிதைகளை அமைக்கும்போது ஒரு தனி இன்ப உணர்வு ஏற்படுகின்றது. குறிப்பாகத் தெய்வீகப் பாடல்களுக்கு இந்த மரபு வழி ஒரு தனிச்சிறப்பைக் கொடுக்கின்றது. யாப்பிலக்கணத்தில் மோனையும், எதுகையும் கவியின் இரண்டு கண்களாகப் பார்க்கப்படுகின்றன. என்னால் முடிந்தவரை மோனை, எதுகை, போன்ற தொடைகட்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றேன். பா, பாவினம் என இரண்டு வகைச் செய்யுள்கள் உள்ளன. பாவில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகை உள்ளன. வெண்பா இருவர் உரையாடும் ஓசையினை எடுத்துக் காட்டும் செப்பலோசையைக் கொண்டது. ஆசிரியப்பா ஒருவர் பேசுதலை எடுத்துக் காட்டும் தன்மையினைக் காட்டும், அகவல் ஓசை கொண்டது. கலிப்பா என்பது தாழ்ந்துயர்ந்து வரும் தன்மையினைக் காட்டும் துள்ளல் ஓசையினைக் கொண்டது. வஞ்சிப்பா தாழ்ந்தே வரும் தன்மை கொண்ட தூங்கல் ஓசையினைக் கொண்டது.

வெண்பாவானது கொண்டிருக்கும் அடிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, அளவியல் வெண்பா, பஃறொடை வெண்பா, கலி வெண்பா என ஐந்து வகைப்படும். இந்த ஐந்து வகையான வெண்பாக்களையும் மேலும் நேரிசை, இன்னிசை என மேலும் வகைப்படுத்த முடியும். ஆசிரியப்பாவானது நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும். கலிப்பாவானது ஒத்தாழிசைக் கலிப்பா, வெண் கலிப்பா, கொச்சகக் கலிப்பா, உறழ் கலிப்பா என நான்கு வகைப்படும். வஞ்சிப்பாவானது குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா என இரண்டு வகைப்படும். மேலும் இந்தப் பாவகைகள் ஒவ்வொன்றும் இலக்கணம் குன்றி வரும்போது பாவினம் ஆகும். அடிப்படையில் பாவினம் தாழிசை, துறை, விருத்தம் என மூன்று வகைப்படும். இந்த நூலில் பல பா வகைகளையும், பாவினங்களும் காணப்படுவதைக் காணலாம்.


மொத்தத்தில் நான் கற்றுக் கொண்ட மரபுக்கவி ஆக்கும் அறிவின் மூலம் நான் வணங்கும் கலியுகத்து அவதாரர் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா மீது நான் எழுதிய கவிதைகளின் தொகுப்பே இந்த நூலாகும். எனக்கு உள்ள நேரத் தட்டுப்பாடு, இசைத்துறையில் உள்ள எனது அறிவீனம், மரபுக் கவிதையில் இது ஒரு கன்னி முயற்சி என்பவற்றை இந்த நூலில் உள்ள குறைபாடுகளுக்கான காரணிகளாக இருக்கலாம் என்பது எனது கணிப்பு. இந்த நூலின் சிறப்பிற்கான காரணிகளாக மரபுக்கவிதையில் எனக்கேற்பட்ட ஆர்வம், எனது விடா முயற்சி, என் கற்பனா சக்தி, நான் பெற்ற மரபுக்கவிதை வழிகாட்டிகள், வாசிக்கக் கிடைத்த நூல்கள், ஆன்மீகத் துறையில் எனக்குள்ள ஈடுபாடு, பட்டறிவுகள், குடும்பத்தினரின் ஒத்துழைப்பு, இலக்கிய நண்பர்களின் ஊக்குவிப்பு, இறுதியாக ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக பகவான் பாபாவின் ஆசிகள் என்பவற்றைக் குறிப்பிடுகின்றேன். என்னுடைய இந்தப் படைப்பில் ஏதாவது குறைகள் இருப்பின் பெரு மனதுடன் ஏற்று, உங்கள் கருத்துக்களைத் தெரிவித்து ஊக்கப்படுத்துமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேன். எனது வாழ்க்கையில் ஆன்மீகம் எனது சிறுவயது முதல் பின்னிப் பிணைந்து இருந்தது. ஒரு கட்டத்தில் நான் ஓர் சாயி பக்தனாகும் பாக்கியம் கிட்டியது. நான் பட்டறிந்து தெளிவு பெற்றே சாயி பக்தனானேன். அந்தப் பாதையில் குறிப்பிடத்தக்களவு பயணித்திருக்கின்றேன். பெற்ற பட்டறிவுகள் பெறுமதியானவை. சத்திய சாயி பாபாவின் சமதர்மக் கொள்கையும், ''மானிட சேவையே கடவுள் சேவை'' என்ற கோட்பாடும் எனக்கு மிகவும் பிடித்தவை. மேலும் பகவானின் கூற்றாகிய ''உன்னால் முடிந்தவரை நன்மை செய், தீமையை அறவே செய்யாதே'' என்னைக் கவர்ந்தது

பகவான் சத்திய சாயி பாபாவின், தரிசனம், அவரின் அற்புதங்களைக் காணும் பாக்கியம், என் வாழ்வில் நடந்த நிகழ்வுகள், நான் சந்தித்த முக்கியமான பிரசித்தி பெற்ற சாயி பக்தர்கள், சாயி பக்தராக எனது ஈடுபாடு, என் கற்பனை வளம் மற்றும் நான் வாசித்த சாயி பற்றிய நூல்கள் இந்த நூலுக்கான மூலமாக அமைந்துள்ளன.

.

இந்தக் கலியுகத்தில் அவதாரம் எடுத்துள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா மானிட உருவில் வாழ்கின்ற சம காலத்தில் நாம் வாழ்வது எமது பாக்கியமே. அன்பே உருவான பகவான் சத்திய சாயி பாபா மீது இசையோடு ஓதுதல் செய்யக்கூடியதாக அல்லது பாடக்கூடியதாக சில பாடல்களை இந்த நூலில் படைத்திருப்பது என் மனதிற்கு திருப்தி தருகின்றது. இந்தப் பாடல்களைப் படிக்கும் பொழுதெல்லாம் வாசகர்களுக்கு பகவான் பாபாவின் அருள் கிடைக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் இந்த நூலினை பகவான் சாயிபாபாவின் தாள்களில் சமர்ப்பித்து வணங்குகின்றேன்.

ஜெய் ஸ்ரீ சாயி ராம்!



சி.அ.சுரேஸ் (அகணி) , ரொறன்ரோ, ஒன்ராறியோ, கனடா

மின் அஞ்சல்: authorakani@yahoo.com,

தொலைபேசி: 1 - 416 732 8021

மார்ச் 2011

ஓம் ஸ்ரீ சாயிராம்!

எல்லாம் வல்ல பகவான் சத்திய சாயி பாபாவை நினைவில் நிறுத்தி இந்தப் பாடல்களைப் பாடுவோருக்கு சாயி மழைபோல் அருளினைப் பொழிவாராக!



# சாயி-பஞ்சபுராணங்கள்

**சாயிப்பதிகம்**

பதியுறை கலியுக அவதாரக் கடவுளர்
மதிமுக சடைதலை ஒளிவழி விளங்குவர்
விதியினை வென்றிட அருளினைத் தருமிவர்
கதிநிலை இவரெனச் சரணடை நிலையதே!

**சாயிவாசகம்**

அன்பினைச் சொரியும் தாயினைப் போல
அடியேன் எனையே ஏற்று
நன்குணம் கொண்ட நண்பனாய் நின்று
நற்றுணை காட்டியே கொண்டு
தன்னியம் உள்ள தகப்பனாய் என்றும்
தடைகளை உடைத்திடும் பகவான்
முன்வழி ஆகும் குருவாய்க் கொண்டேன்
முழுதாய் அருளினைப் புரிவீரே!

## சாயி-இசைப்பா

ஒளிமுகப் பகவான் ஒருவனே தெய்வ
உணர்வினில் கலந்ததோர் அமுதே!
தெளிவினைப் பெறவே திரண்டிடும் பக்தர்
தேடுவார் உன்னருள் பெறவே!
களிப்பினைப் பெற்றுப் பக்குவம் உற்றே
கதிநிலைக் கொள்வரே பாபா!
உளியினைப் போல மனதினைச் செதுக்கி
உத்தம வாழ்வினைத் தருவிரே!

## சாயிப்பல்லாண்டு


பாலனாய்ப் படுத்து உறக்கம் செய்யினும்
பாம்பினை அழைத்த பாபா!
மூலனாய் இருந்து மானிட சேவையை
முழுதாய் செய்துமே பக்தரைப்
பலனினைக் கருதாப் பொதுநலம் புரியப்
பாதையைக் காட்டிடும் புனிதா!
நலங்கள் புரிந்திடும் நாதபக வானுக்கே
பல்லாண்டு கூறு வோமே!

## சாயி-புராணம்

பகவா னாய்இருந் தேநீ அருளினை
யுகத்தில் தோன்றிய தெய்வமே யோகியே!
பகலில் சூரியன் இரவினில் சந்திரன்
அகத்தில் ஏற்றியே வாழ்த்தி வணங்குவோம்!

## சாயி-புகழ்

ஆறுதலைத் தேடிவிடச் சோதியாகும் பாபா
ஆதவனாய் வீசிடுவார் சாயிநிதம் பாபா
பேறுகளில் பேரிதாய்க் காணுகின்றோம் பாபா
பெற்றிட்ட தாயாக நினைக்கின்றோம் பாபா
வீறுகொள் அருளோடு விளங்குகின்ற பாபா
வியாபித்து மிளிரும் பேரருளே பாபா
மாறுபடும் மதங்களையே அணைத்திருக்கும் பாபா
மாண்புமிகு புனிதராய் மலர்ந்திருக்கும் பாபா!



# காப்பும் களிப்பும்

**காப்பு**


**நேரிசை வெண்பா**

கற்பகமே ஞானக் கடவுளே உன்றனின்
பொற்பதம் வேண்டிடும் பக்தனிவன் - அற்புதமாய்
சொற்சுவை சேரவே செந்தமிழ்ச் செய்யுளைக்
கற்க அருள்வீரே காத்து..

**களிப்பு**

**நேரிசை வெண்பா**

பாத கமலத்தில் பாடிச் சரணடைந்து
நாதமுறப் பாடுவோர் நன்றாக - வேதமாய்
ஓதிடப் பாக்கள் ஒருவாறாய்ச் செய்தேனே!
சோதியாய் நின்றவரே சொத்து.



# கணபதி வணக்கம்

## கணபதி தெய்வம்
## இன்னிசைச் சிந்தியல் வெண்பா

கணபதி தெய்வத்தைக் காலையில் நன்றே
வணங்கியே வந்தால் வடுக்களும் நீங்கும்
கணந்தோறும் நன்றாகக் காத்து

## கணபதிக் கடவுளே
## நேரிசை ஆசிரியப்பா

கணபதிக் கடவுளே கருணை செய்வீர்
வணங்கிட வளமுடன் வரங்கள் தருவீர்
குணங்களை நலமாய்க் கொடுத்துக் கொள்வீர்
வணங்கிடும் போதில் வந்து செல்வீர்
கணங்கள் தோறும் காட்சி கொடுப்பீர்
தணலில் வீழினும் தாங்கிக் கொள்வீர்
மணலின் சூட்டை மழையாய் மாற்றுவீர்
இணங்கி வந்து இரக்கம் கொள்வீர்
வணங்கிட வணங்கிட வினைகள் தீர்ப்பீர்
கணமுகக் கடவுள் கருணையே
இணங்கியே எழில்பெற எமக்கருள் தருகவே!

## கணபதியே துயரங்கள் களைந்திடுவாய்!
## கொச்சகக் கலிப்பா

கணபதியே துயரங்கள் களைந்திடுவாய் கடவுளேநீர்
வணங்கிடவே வரமருளும் வியப்பான விநாயகரே!
சுணக்கமின்றி விடயங்கள் சுபமுறவே தொழுதிடுவோம்
கணந்தோறும் நினைத்துயாமே காலமெல்லாம் வாழ்ந்திடவே!

## ஆனைமுகக் கடவுளே!
## கொச்சகக் கலிப்பா

சிவபெருமான் நடராசர் செம்புதல்வா சீர்செய்வாய்
இவர்வாழ்வில் எல்லாமே இனிதாக வழிசெய்வாய்
காவல்செய் கணேசுவரா கருணையைநீ பொழிந்திடுவாய்
அவலம்தீர் தமிழர்கள் ஆனைமுகக் கடவுளே!



# சாயி கீர்த்தனைகள்

## பிள்ளையார் வணக்கம்

### கீர்த்தனை

**இராகம் : ஹம்சத்வனி**
**தாளம்: ஆதி (திஷ்ட நடை)**

**பல்லவி**

பிள்ளையார் தாள் வாழ்க - எங்கள்
பிள்ளையார் தாள் வாழ்க!

**அனுபல்லவி**

உள்ளத்தில் சிந்தனை ஊறிடச் செய்வீர்
அள்ளும்போது குறைந்திடாத அறிவினைத் தருவீர்
(பிள்ளையார்)

**சரணம்**

விந்தை விநாயகரே வினைகள் தீர்ப்பீர்
பந்தியில் முந்திட பாத்திறன் அளிப்பீர்
இந்நூல் சிறப்புற எல்லாம் கொடுப்பீர்
நந்தமிழ் ஓங்கிட நல்லருள் புரிவீர்
(பிள்ளையார்)




# மனம் நிறைகிறதே

## கீர்த்தனை
இராகம்: பிருந்தாவனசாரங்கா
தாளம்: மிஷ்ரசாபு

## பல்லவி
மனம் நிறைகிறதே மதிமுக பாபாவை - நினைக்கையில்
தினமும் தவிக்கிறதே தங்களைக் காணாமல்

## அனுபல்லவி
கனவினில் வந்துமே காட்சியைத் தருகையிலே
நனவில் நடந்ததாய் நாங்கள் மகிழ்கையிலே
(மனம்)

## சரணம்
கல்போன்ற மனமெல்லாம் கனியாய் மாறிடும்
வல்லவன் சாயியால் வாய்மை வென்றிடும்
நல்லவை எல்லாம் நன்றாய் நடந்திடும்
அல்லல்கள் நீங்கிட அருளும் கிடைத்திடும்
(மனம்)



# கலியுக அவதாரர்

## கீர்த்தனை
**இராகம்: மோகனம்**
**தாளம்: ஆதி**

### பல்லவி
கலியுக அவதாரர் காத்திடும் சாயியை
சலிப்பின்றித் தொழுது சரண் அடைவோம்

### அனுபல்லவி
பகவானை வணங்கிப் பணியினைச் செய்யுங்கள்
அகத்தால் நிறுத்தி அவரை நினையுங்கள்
(கலியுக)

### சரணம்
எண்ணிய கருமங்கள் இனிதாய் நடந்திட
திண்ணமாய் பாபாவைத் திடமாய் நம்புங்கள்
கண்ணும் கருத்துமாய் காத்துக் கொள்ளுவார்
மண்ணிலும் விண்ணிலும் மனிதம் காப்பார்
(கலியுக)

வல்லவர் பாபா வழிகாட்டும் இறைதூதர்
நல்லவர் அவரே நானிலம் தன்னிலே
இல்லாதது யாவற்றையும் அவரே தருவார்
செல்லாத இடமேயில்லை அவர்புகழ் தாம்
(கலியுக)

## வணங்காத நாளில்லை

### கீர்த்தனை
**இராகம்: சுத்ததன்யாசி**
**தாளம்: ஆதி**

### பல்லவி
வணங்காத நாளில்லை வாஞ்சையாய்ப் பாபாவே
சுணங்கினும் உன்னருளை சுபமாகத் தந்திடுவீர்

### அனுபல்லவி
நெடுந்தூரம் இருந்து நேசமுடன் வந்தேனே
தடுமாறும் மனதுடன் தஞ்சமுற வந்தேனே
(வணங்காத)

### சரணம்
நாள்தோறும் வரிசையில் நல்லதுக்காய் காத்திருந்தேன்
உள்ளத்தில் உமைநினைத்து உருகிக் கொள்கின்றேன்
வெள்ளம்போல் பக்தருடன் வேந்தனைக் காண்கின்றேன்
தாள்தொட்டு நான்துதிக்க தவமுடன் இருக்கின்றேன்
(வணங்காத)



## உன்னைச் சரணடைந்தேன்


### கீர்த்தனை
இராகம்: சண்முகப்பிரியா
தாளம்: ஆதி

### பல்லவி
உன்னைச் சரணடைந்தேன் சாயிநாதா - பகவான்
உன்னைச் சரணடைந்தேன் சாயிநாதா

### அனுபல்லவி
சிறப்பாய் நற்குணம் சீராக வேண்டுமென்று
அறவும் தீங்குணம் ஆகுதல் வேண்டாமென்று
(உன்னைச்)

### சரணம்
ஆன்மீக வாழ்வே அற்புத வாழ்வென்று
மேன்நீடு ஓங்கும் வாழ்வே வாழவென்று
பேராசை வேண்டாம் பெற்றது போதுமென்று
சீராக வாழ்வோம் சாயியின் நினைவோடே
(உன்னைச்)





## பகவான் தரிசனமே

### கீர்த்தனை

இராகம்: ஹிந்தோளம்
தாளம்: ஆதி

### பல்லவி

பகவான் தரிசனமே சாயி - எமக்கு
இகத்தில் கிடைக்காது இந்தத் தரிசனமே

### அனுபல்லவி

என்றுமிலா இன்பம் இதயத்தில் வந்தது
அன்றுதானே நின்னை அழகாகக் கண்டேன்
(பகவான்)

### சரணம்

அன்பே உருவான அற்புதத் தோற்றம்
உன்னதப் பார்வை ஒப்பிலா ஒளியே
மென்மை அசைவு மேவிடும் பார்வை
என்னது கரமும் இறைவனைத் தொட்டதே
(பகவான்)

# நினைப்பாய் மனமே

## கீர்த்தனை
**இராகம்: மாயாமாளவகௌளை**
**தாளம்: ஆதி**

## பல்லவி
பாபாவின் நினைவை நினைப்பாய் மனமே - தினமும்
அவரின் நினைவே அமைதி தருமே

## அனுபல்லவி
தருமே வளமும் துணிவும் ஞானமும்
வருமே குணமும் வாய்ப்பும் வளமும்
(பாபாவின்)

## சரணம்
கனவில் காண்பது நிஜத்தில் நடக்குமே
மனத்தில் நினைக்க நடந்தே தீருமே
நல்லது நினைக்க வாழ்வு மலருமே
வல்லவன் அருளால் வருமே மாண்புமே
(பாபாவின்)



## கவியில் வல்லோனே

### கீர்த்தனை
இராகம்: கீரவாணி
தாளம்: ஏகம் (திஸ்ட நடை)

### பல்லவி
கவியில் வல்லோனே - பாபா
கவியில் வல்லோனே

### அனுபல்லவி
கவியில் வல்லவன் கானக வித்தன்
கவியினில் சிறக்க கருணை செய்வாய்
(கவியில்)

### சரணம்
கவியைக் கற்றேன் உந்தன் அருளால்
புவிக்காய் வாழ்வேன் உந்தன் செயலால்
தவிக்கின்ற மனதிற்குத் தைரியம் தருவாய்
குவிக்கின்ற கவிதைக்கு பலனினைத் தருவாய்
(கவியில்)

பூவிடும் போதிலும் பாடிடச் செய்வாய்
தூவிடும் பாடகர்க்கு ஆதரவு செய்வாய்
காவிடும் காற்றுக்கு உந்துதல் செய்வாய்
செவிக்கும் இனிமையைச் சேர்த்திடச் செய்வாய்
(கவியில்)

# மன்னிக்க வேண்டுகின்றேன்

## கீர்த்தனை
**இராகம்: பாகே ஸ்ரீ**
**தாளம்: ஆதி**

## பல்லவி
மன்னிக்க வேண்டுகின்றேன் - சாயி
மன்னிக்க வேண்டுகின்றேன்

## அனுபல்லவி
குறைகள் இருப்பின் மன்னிக்க வேண்டுகின்றேன்
நிறைகள் இருப்பின் வாழ்த்திட வேண்டுகின்றேன்
(மன்னிக்க)

## சரணம்
நல்லதைச் செய்திட நான் விரும்புகின்றேன்
நல்வழி சென்றிட நான் விரும்புகின்றேன்
இல்லாத வளத்துக்காய் உன்னை வேண்டுகின்றேன்
எல்லாம் இனிதாக உன்னை வேண்டுகின்றேன்
(மன்னிக்க)

அன்பாகப் பேசிட நான் விரும்புகின்றேன்
என்றுமே உதவிட நான் விரும்புகின்றேன்
என்னது வெற்றிபெற உன்னை வேண்டுகின்றேன்
உன்னது அருளுக்காய் உன்னை வேண்டுகின்றேன்
(மன்னிக்க)

# தவிக்கின்ற உறவுகளைக் காப்பாய்

## கீர்த்தனை
இராகம்: கானடா
தாளம்: ஆதி

## பல்லவி
தவிக்கின்ற உறவுகளைக் காப்பாய் - சாயி
தவிக்கின்ற உறவுகளைக் காப்பாய் - ஐயா

## அனுபல்லவி
அல்லலுறும் மக்களை அணைத்துக் கொள்வாய்
பொல்லாதோர் வதையினைத் துரத்திக் கொள்வாய்
(தவிக்கின்ற)

## சரணம்
எங்கள் உறவுகள் படுகின்ற வேதனைகள்
தங்கள் கருணையால் தீராதோ எம்பகவான்
உங்கள் அருளால் அவர்கள் துயரங்கள்
நீங்கிடச் செய்வீரோ சாயியே எம் பகவான்

(தவிக்கின்ற)

# நன்றி சொல்கிறேன்

## கீர்த்தனை
இராகம் : மத்தியமாவதி
தாளம் : ஏகம்

## பல்லவி
நன்றி சொல்கிறேன் - நாதா
நன்றி சொல்கிறேன்

## அனுபல்லவி
என்றுமே காட்டும் அன்புக்கு நன்றி
முன்னின்று கொட்டும் அருளுக்கு நன்றி
(நன்றி)

## சரணம்
உங்கள் போதனைக்கு என்றும் நன்றி
எங்கும் நிறைந்திடும் தன்மைக்கு நன்றி
மங்காது ஒளிர்ந்திடும் ஒளிக்கு நன்றி
ஓங்கியே செய்திடும் சேவைக்கு நன்றி
(நன்றி)

உலகத்தில் உங்கள் பிறப்பிற்கு நன்றி
பலமுறை செய்த உதவிக்கு நன்றி
நலமுற வாழ்விடும் அருளுக்கு நன்றி
திலகமாய் விளங்கிடும் சாயிக்கு நன்றி
(நன்றி)

## சத்திய சாயி பகவானே

### கீர்த்தனை
இராகம்: காம்போதி
தாளம் : ஆதி

### பல்லவி
சத்திய சாயி பகவானே - எங்கள்
சத்திய சாயி பகவானே

### அனுபல்லவி
உன்முகம் கண்டிட உவகை பொங்குதே
உன்னருள் பெற்றிட என்மனம் தேடுதே
(சத்திய)

### சரணம்
எங்கும் செல்வாயே இங்கு வருவாயோ
தங்கு தடையின்றி பங்கு தருவாயோ
மங்காத உன்முகத்தைக் காணச் செய்வாயோ
ஓங்கிடும் ஒளியினை உணரச் செய்வாயோ
(சத்திய)

தத்துவ வித்தரே புத்தியைத் தருவாயோ
சித்தரில் சித்தரே முத்தியைத் தருவாயோ
எத்திசையும் சென்று பத்தரைப் பார்ப்பாயே
இத்திசையும் வந்து எம்மையும் பார்ப்பாயோ
(சத்திய)

# கனவினில் வருவாயோ

## கீர்த்தனை
இராகம் : அமிர்தவர்ஷினி
தாளம்: ஆதி

## பல்லவி
கனவினில் வருவாயோ - சாயி
கனவினில் வருவாயோ

## அனுபல்லவி
கனவினில் வந்து காட்சி தருவாயோ
நினைவிலும் நின்று ஆட்சி புரிவாயோ
(கனவினில்)

## சரணம்
உன்னை நினைக்கையில் நீ வருவாயோ
அன்பிற்கு தவிக்கையில் நீ வருவாயோ
மன்றாடும் போதினில் நீ வருவாயோ
துன்பம் வந்திட நீ வருவாயோ
(கனவினில்)



# சத்திய சாயி வணக்கம்

## ஆனந்த பாபாவே!
## நேரிசை வெண்பா

ஆனந்த பாபாவே அற்புத நாதனே
தானங்கள் தர்மங்கள் தத்துவம் -- ஆனவரே
அன்பின் உருவம் அணைக்கும் கரங்களுடன்
உன்னத தெய்வமே ஓம்.

## பங்கஜ ரூபனே!
## நேரிசை வெண்பா

பார்த்தி புரீஸ்வர பங்கஜ ரூபனே
ஆர்த்தியை வாங்கும் அழகினைப் - பார்ப்பமே
அன்பே சொரிய அசைக்கும் முகத்தினிலே
இன்பம் நிறைந்து இனிது.

## சக்தி-சித்தி-முக்தி
## இன்னிசைச் சிந்தியல் வெண்பா


பக்தர் வருந்த பரிந்து வருவாரே
சக்தியைத் தந்துமே சித்தி தருவாரே
முக்தியும் காட்டுவார் முன்.

## சாயி அமுதம்
## பஃறொடை இன்னிசை வெண்பா

அன்புடன் சாயி அமுதம் தருவாரே
இன்புடன் பெற்ற இறையருளில் வாழ்வோமே!
மன்றாடும் போதெல்லாம் மாந்தரைக் காப்பாரே
வன்குணம் இல்லாது வாய்ப்பைப் பெறுவோமே
சென்றிடும் பாதையில் சேர்ந்து வருவாரே
நன்குணம் பெற்றுயாம் நல்வழியில் ஓங்குவமே!
தோன்றும் இடமெல்லாம் சோதியாய் நிற்பாரே
நன்றாய்நாம் வாழ்ந்துமே நல்லதைச் செய்வோமே!
அன்னையாய் நின்றுமே அன்பைப் பொழிவாரே
இன்னருள் ஏந்தியே ஏற்றத்தைக் காண்போமே!
தன்னலம் இன்றியே தாங்கி உயர்வமே
என்றும் இறைவனாய் ஏற்று.

## சாயி நாதனே போற்றி!
## அடிமறிமண்டில ஆசிரியப்பா

சத்ய சாயி நாதனே போற்றி!
பத்தி புரிவாழ் பரமனே போற்றி!
சத்யம் தவறா சர்வா போற்றி!
பத்தரின் குருவே பாபா போற்றி!
முத்திக்கு வழிசொல் முதல்வா போற்றி!



## பகவானாய்ப் பூக்கிறாரே!
## கட்டளைக் கலித்துறை

கனியாய்க் கரும்பாய்க் கவியின் சுவையாய்க் களிப்புறவே
இனியார் இவரின் உயர்வாய் இகத்தில் இலங்குவரே
மனிதர் புகழ மலர்வாய் வியக்க மகிழ்கிறாரே
புனிதமும் பெற்று புவியில் பகவானாய்ப் பூக்கிறாரே!

## வேலவனாம் பகவானே
## கொச்சகக் கலிப்பா

அற்புதங்கள் புரிந்திடுவார்
ஆபத்தினையும் தடுத்திடுவார்
பற்றுக்கள் களைந்திடுவார்
பாவங்கள் அறுத்திடுவார்
ஆற்றல்கள் கொடுத்திடுவார்
அருளினையும் பொழிந்திடுவார்
வெற்றிகளைத் தந்திடுவார்
வேலவனாம் பகவானே!

பக்தியோடு கூடிய
கட்டுப்பாடுடன்
செய்யப்படும்
கடமையினால்
வெற்றி
பெறுவதென்பது
நிச்சயமாகும் - பாபா

## இறைவர்
### கட்டளைக் கலிப்பா

ஞானம் அருளி ஞானநெறி சொல்வார்
　ஞாலமே போற்றிட ஞானம் போதிப்பார்
கானமே பாடியே கருணை செய்வார்
　கல்வி வளர்க்கக் காரியம் புரிவார்
எனது வாழ்விலும் இனியவை செய்தார்
　எண்ணற்ற பக்தரைக் கொண்ட இறைவர்
கனவினில் வந்து காட்சிகள் தருவார்
　கண்டதை நிஜத்தில் காட்டிக் கொள்வரே!

## அன்பே தோற்றமாய்
### கட்டளைக் கலிப்பா

அன்பே தோற்றமாய் ஆதியோ இன்றியே
　அந்தம் அற்றுமே அற்புதத் தெய்வமாய்
மென்மைப் பேச்சுடன் மேன்மைகள் செய்துமே
　மேலாய்ப் பக்தரின் உள்மனம் நிற்பவர்
நன்மை செய்துமே நல்லதாய் வாழ்ந்திட
　நாடி நம்மையே காத்துமே கொள்பவர்
என்றும் எம்முடன் வாழ்வதை வேண்டியே
　இகமே சத்திய சாயி ஏத்துகவே!



## சத்தியசாயி
## குறளடி வஞ்சிப்பா

வரங்கள்பல கொடுத்திடுபவர்
சரணடைந்திடக் காத்திடுபவர்
கரத்தினையுமே தாங்கிடுபவர்
சத்தியசாயி
பயங்களை நீக்கும் பரமனாய்
செயலே புரிவார் சத்ய சாயியே!

## சர்வ ரூபனே
## குறளடி வஞ்சிப்பா

குறையாதுமில் தெய்வலோலனே
நிறைவானதாய் நின்றிடுபவர்
அனைத்தினதுமே அடிப்படையுமே
நினைத்திடவுமே வந்திடுபவர்
என்றும்
பக்தரின் பரம தயாளன்
சக்தி கொண்ட சர்வ ரூபனே!

## மூர்த்திபவனே
## சிந்தடி வஞ்சிப்பா

நற்குருவனே நல்லதுறவே நடத்திடுபவர்
அற்புதவனே அல்லல்களை அறுத்திடுபவர்
சத்தியவினன் சர்வமதவன் சாயிநாதனே
முத்தியடைய வழிகாட்டிடும் மூர்த்திபவனே!

## அற்புத நாதனே!
## (செந்தொடை)

என்றும் எங்கும் எப்போதும் எம்மைக்
காக்கும் சத்திய சாயி பகவானே!
சத்தியம் சிவம் சுந்தர ரூபனாய்
தைரியம் தந்திடும் அற்புத நாதனே!

## சரணம் சரணம்
## (இரட்டைத்தொடை)

சரணம் சரணம் சரணம் சரணம்
சத்திய சாயி சரணம் சரணம்
நித்திய ரூபனே சரணம் சரணம்
தத்துவ சிற்பியே சரணம் சரணம்

## தத்துவ நாதா
## (அந்தாதித் தொடை)

நாம்வாழும் உலகின் தத்துவ நாதா
தாம்செய்து நல்வழி காட்டிடும் சிறப்பே
சிறப்பினைச் செய்யும் வாழும் தெய்வம்
சிறப்பினைச் செய்திட எழுவோம் நாமும்.

## பகவான்

### கலிப்பா

### தரவு

நித்தமும் சாயிபாபா நினைவோடு வாழவேண்டும்.
பத்தர்கள் தரிசனத்தை பார்த்துயாம் மகிழவேண்டும்
சத்தியம் உலகினிலே சாயியால் நிலைக்கவேண்டும்

### தாழிசை

எங்களின் சாயிபாபா இனிதாக ஒளிரவேண்டும்
மங்காத அவரமுதம் மகத்தாகப் பொழியவேண்டும்
எங்குமே அவர்நாமம் இன்னமுதாய்ச் செபிக்கவேண்டும்
அவர்காலம்

### சுரிதகம்

நாங்களும் வாழ்வதே நல்ல பாக்கியம்
தங்கவே பகவான் சாயி அமுதம்
சங்கொலி நாதமாய்ச் சர்வமும் ஓமே!

## அன்பினால் நிறைந்த பாபா

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அன்பினால் நிறைந்த பாபா
 அனைத்தையும் பிணிக்கும் பாபா
இன்முகச் சிரிப்பால் பாபா
 இதயத்தைக் காண்பீர் பாபா
மென்மையாய் உரைக்கும் பாபா
 மொழிகளே முழுமை பாபா
என்றுமே மறவேன் பாபா
 இதயமே வணங்கும் சத்யா!

## இன்பமே அளிக்கும் சாயி
## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இன்பமே அளிக்கும் சாயி
    எங்குமே நிறையும் பாபா
அன்பினைச் சொரியும் சாயி
    ஆசிகள் அருளும் சாயி
மென்மையாய் முறுவல் செய்து
    முழுமையாய் விளங்கும் சாயி
மன்றாடும் போதில் எல்லாம்
    வந்திடும் சத்திய சாயி

## சாயிமாதா
## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆதியிலும் பாபா அந்தமுமே பாபா
    அறிவினிலும் பாபா எங்கள்
மேதினியில் வாழ்வை மேன்மையுறச் செய்து
    மேன்மைவழி ஆக நின்று
ஓதியுயர் பேற்றை ஓம்விளங்க ஆக்கி
    உயர்மொழிகள் நாடித் தந்து
சோதியாக்கும் சத்யம் சுந்தரமாய் விளங்கி
    சகலருக்கும் நெறிநீர் சாயியே!

## சத்தியமே உருவாக
## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சத்தியமே உருவாக அன்பே அணிகலனாய்ச்
சாதனைகள் புரிந்திடும் சத்திய சாயியே
நித்தமுமே தரிசிப்போர் உள்ளம் களிப்படைய
நீண்டநேரம் வலம்வரும் சத்திய சாயியே
உத்தமதாம் செயலாலே ஓங்கி உயர்ந்தவராய்
ஒப்பிலாத கடவுளே சத்திய சாயியே
சித்தரிலே சிறப்பான சித்தர் உலகினிலே
சிறப்பான அவதாரா சத்திய சாயியே!

## பத்தரின் வள்ளலார்
## வண்ணம்

சித்திதரும் பத்தரின் வள்ளலார்
புத்திதரும் வித்தரின் வேந்தனார்
தித்திக்கும் கனியாக நிற்பாரே!

## நலத்தைத் தருவார் பாபா!
## வண்ணம்

தக தக ஒளியிலும்
சட சட காற்றிலும்
சல சல நீரிலும்
நில நில வானிலும்
நிலவிலும் இருட்டிலும்
நலத்தை அருள்வார் பாபா!

## சிவசக்தியரே
### தெம்மாங்கு

சத்தியம் காப்பவரே
  சாயிநாத பத்திதேவரே
பத்தியின் அருளாளரே
  பரமதயாள சிவசக்தியரே

## எம்சாயி ஜெய! ஜெய!
### பராபராக்கண்ணி

கருணை உள்ளத்தாலே எம்சாயி ஜெய! ஜெய!
தருமே அன்பினாலே எம்சாயி ஜெய! ஜெய!

அருளின் மகிமையாலே எம்சாயி ஜெய! ஜெய!
உருவ ஒளியினாலே எம்சாயி ஜெய! ஜெய!

## பகவானே
### கலித்தாழிசை

மானிட சேவையை மகத்தாகச் செய்பவரே
இனியவெம் வாழ்வினை என்றுமே தருபவரே
புனிதமாம் வாழ்வினைப் பூமியில் வாழ்வதற்கே
கனிந்தனர் அன்புடன் கருணைப் பகவானே!

## சாயியை வாழ்த்துதும்மே!
## கட்டளைக் கலித்துறை

பாபாவின் சேவையால் பாங்காய் விளங்கிடும் பள்ளிகளும்
கோபாலன் சாயியின் கோட்பாடு கல்வியின் கோட்டமுமாய்
காபாலி சக்தி கடவுளாய் சாயி கருணையுமே
பாபாட நானும் பகவானின் சாயியை வாழ்த்துதும்மே!

சத்திய சாயியின் சீரான வைத்திய சாலையுமே
நித்தமும் பாபாவால் நேசமாய் நோயினை நீக்கிடுமே
பத்தர்கள் காணும் பல்வகை அற்புதப் பக்குவமுமே
இத்தனை மானிடர் என்றுமே சாயியை ஏத்துவரே!

பகவான் உலகினில் தந்த குடிநீர்ப் பரிணமிப்பே!
இகத்தில் அவரினால் ஏற்றிடும் தீபமாம் இன்னொளியே
பகலும் இரவுமாய் பாபா எமக்காய்ப் பகர்வனவே
அகத்தில் நினைந்து அமுதமாம் சாயியை வாழ்த்துதும்மே!

## அன்பு
## கலித்துறை

அன்பினைச் சொரியும் அன்னையாய் இருக்கும் அறவோனே
அன்பினைப் பேசி அறிவினைப் பெருக்கி இருப்போனே
அன்பினை ஊட்டி அருளினைப் பொழிந்து தருவோனே
அன்பே வழியென் றாண்டவன் ஆகும் சத்தியனே!

## உலக வேந்தன்
## கலிவிருத்தம்

சத்திய சாயி நாமமே கொண்டும்
நித்தம் எமக்கு நிம்மதி தந்திடும்
உத்தம லோலன் உலக வேந்தாம்
பத்தர் கூடிப் பாதம் போற்றுவோம்.

## நவமுத்து நாதனவர்
## வஞ்சித் தாழிசை

நிறைவான பெற்றாராக
முறையான கடவுளாக
குறையிலாதோர் நண்பனாக
துறைசாராக் குருவாக
அன்பினால் நிறைந்தவர்
துன்பத்தை நீக்குபவர்
என்றுமே உதவுவார்
ஆன்மீகம் போதிப்பார்
அவதாரர் சத்தியசாய்
நவமுத்து நாதனவர்
சிவனுமாய் சக்தியுமாய்
இவரில்லா இடமேயில்லை.



## மனத்தால் ஒப்பிலாரே
## வஞ்சி விருத்தம்

அருளைப் பொழியும் அற்புதனே
வருவாய் திருவாய் வாழ்வினிலே
தருவாய் வரத்தை தினமுமே
உருகும் மனத்தால் ஒப்பிலாரே!

## உதவிடுவாரே
## வஞ்சித்துறை

எங்குமிருப்பார் சாயிபாபா!
பாங்காயிருப்பார் பத்திராசா!
சேவையாளன் மனுக்கடவுள்
தேவையறிந்தே உதவுவாரே!

## நம்சாயி வேண்டியே கும்மியடி
## பக்திப்பாடல்

கும்மியடி சாயிபாபா நாதன் அருளுக்கு
  கூடிடும் பக்தர்கள் கும்மியடி
நம்மது தேவன் நாடி வருதற்கு
  நம்சாயி வேண்டியே கும்மியடி

## ஒப்பிலா தெய்வமே
## பக்திப்பாடல்

தந்தன தன்னானே னானே
தந்தன தன்னானெ

தந்தன தந்தன தந்தன - தந்தன
தந்தன தன்னானே

சத்திய சாயிதானே - இங்குமே
நித்தமும் வந்தாரே

ஒப்பிலா தெய்வமே எங்களின் - அன்பிலே
எப்பவும் சொர்க்கமே

கும்மியைச் செய்வமே எங்களின் - மன்றிலே
கும்மியைச் செய்வமே



# சத்திய சாயி கனவில் வருவார் பக்திப்பாடல்

**இராகம் : சிவரஞ்சினி**
**தாளம்: ஆதி (திஷ்ட நடை)**

சத்திய சாயி கனவில் வருவார்
சத்திய சாயி நினைவில் வருவார்
சத்திய சாயி என்றும் வருவார்
சத்திய சாயி எங்கும் வருவார்

சத்திய சாயி அருள் தருவார்
சத்திய சாயி அன்பு தருவார்
சத்திய சாயி இன்பம் தருவார்
சத்திய சாயி வரம் தருவார்

சத்திய சாயியால் இல்லம் சிறக்கும்
சத்திய சாயியால் இன்பம் சிறக்கும்
சத்திய சாயியால் கல்வி பெருகும்
சத்திய சாயியால் எல்லாம் பெருகும்
சத்திய சாயி தரிசனமே
நித்யமும் தரிசனமே
நித்யமும் தரிசனமே
சத்திய சாயி நித்தியமே
சத்திய சாயி தரிசனமே

# சீரடி பாபா வணக்கம்

## சீரடி

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சீரடி சிவனின் ரூபமாய்
சிறப்புக் கொண்டுமே விளங்கிடுவார்
தீரனாய் அருளில் தெய்வமாய்
திறமை செய்துமே ஒளியாவரே
ஆரமும் அணிந்து தோன்றிட
அழகாய்த் தேவன் மிளிர்ந்திடுவார்
வீரனாய்ச் செயலின் விந்தையினால்
வியப்பைத் தந்து அருளிடுவார்

## சீரடியாய் வந்து
## நேரிசை வெண்பா

சீரடியாய் வந்து சிறப்புக்கள் செய்துமே
ஓரமுடன் தெய்வமாய் ஓதியே - ஈரமுறு
நெஞ்சுடன் ஈடிலா நேசமுடன் பக்தரை
அஞ்சாதே என்பார் அறி.




# சர்வ மதம்

## எல்லா மதமும்
## மருட்பா

எல்லா மதமும் இயம்புவை ஒன்றென
சொல்லில் செயலிலும் சாயிநாதன் - வல்லராய்
என்றும் வாழும் எங்கள் தெய்வமே!
அன்பே உருவமாய் ஆன சாய்வரா!

## சமயம் ஒன்றெனும் பகவான் பாபா
## எண்சீரக் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பர்த்தியில் எத்தனை பாரிய செயல்களை
 பாங்காய்ச் செய்திடும் பகவான் பாபா
அர்த்தமாய் தத்துவம் ஆக்கியும் வழங்கியே
 ஆண்டான் அற்புதர் பகவான் பாபா
கர்மமும் செய்திட நன்மொழி தந்துமே
 காவல் நல்கிடும் பகவான் பாபா
சர்வமதக் கொள்கையில் பக்தரை இணைத்துமே
 சமயம் ஒன்றெனும் பகவான் பாபா!



# தெய்வத்தாய் ஈஸ்வரம்மா

## உத்தமி ஈஸ்வரம்மா
## நேரிசை வெண்பா

ரத்னா கரம்வீடில் ராணியாம் இல்லாளாய்
உத்தமி ஈஸ்வரம்மா உட்புகுந்து - நித்தமும்
அத்தனை வேலையும் அன்புடன் செய்துமே
சத்திய வாழ்வினைச் சார்ந்து.


## மணமகள் ஈஸ்வரம்மா
## நேரிசை வெண்பா

மணமகள் ஈஸ்வரம்மா மாமனார் வீட்டில்
குணமான பெண்மகளாய்க் கூடிக் - கணவனுடன்
வாழ்வும் நடத்தி விரதங்கள் செய்தனரே
தாழ்விலாது தர்மங்கள் சார்ந்து.

## உயர்ந்தாரே ஈஸ்வரம்மா
## இன்னிசை வெண்பா

இயல்பாய் எளிமை இறைபக்தி கொண்டே
தயவான போக்கையே தன்னுள் இருத்தி
வியக்கும் வகையில் விளம்பரம் இன்றி
உயர்ந்தாரே ஈஸ்வரம்மா ஓம்.





## கடவுளின் பக்தை
## நேரிசை வெண்பா

கடவுளின் பக்தையாய்க் காரியங்கள் செய்தே
திடமான நட்பினைத் தேடியும் - கூட
இடருடன் நாடிடும் இல்லாதோர் தேவை
கடமையாய்ச் செய்தாரே காத்து.

## ஈசன் தொழுது
## நேரிசை வெண்பா

மூன்று முறையும் முழுதாய்க் கருவுற்று
ஈன்றாளே ஆணொன்றும் ஈர்பெண்ணும் - மூன்றின்பின்
நான்கு முறையும் நலிந்து கருவழிய
நோன்புடன் ஈசன் தொழுது.

## இகத்தில் உயர்ந்தார்
## நேரிசை வெண்பா

செய்துவந்த நோன்பினால் சேர்ந்த பலனாக
தெய்வத்தாய் ஆகியே தேர்விலே - எய்தி
பகவானின் தாயாய்ப் பரிணமித்த அம்பாள்
இகத்தில் உயர்ந்தார் இனிது.

## தெய்வத்தாய்
## நேரிசை வெண்பா

தேர்ந்தெடுத்த ஈஸ்வரம்மா தெய்வத்தாய் உள்ளமும்
ஆர்வம் கருணை அனைத்துமே - பார்த்தி
அடியார் செயலால் அவரினைக் கண்டே
படித்துமே கொண்டனர் பார்த்து.

# சாயி பிறப்பு

## பந்தளவு நீலவொளி
## நேரிசை வெண்பா

பந்தளவு நீலவொளி பம்பரமாய் வந்துமே
உந்தியே ஈஸ்வரம்மா உட்செல்ல - இந்தமுறை
தாய்மை அடைந்து தனயனாய்ச் சத்தியா
வாய்மையைக் காக்கவே வந்து.

## சத்தியா நாமத்தில்
## நேரிசை வெண்பா

தெய்வத்தாய் ஈஸ்வரம்மா தேடிய மைந்தனாய்
உய்த்தனன் ஒப்பில்லா உத்தமன் - தெய்வமே
சத்தியா நாமத்தில் சாயலில் மாந்தராய்
பக்தரிடம் வந்தார் பரிந்து.



# பால பகவான்

## சுப்பம்மா
## நேரிசை வெண்பா

சுப்பம்மா அன்பில் சுகமாய் வளர்ந்துமே
எப்பவும் தாயன்பை ஏற்றுமே - இப்பகவான்
கோடியாய்ப் பக்தரைக் கொண்டிடும் தெய்வத்தைத்
தேடினோம் பேறாகத் தேர்ந்து.

## கடவுளர் சத்தியா
## நேரிசை வெண்பா

கார்த்திகையில் தோன்றிக் கடவுளர் சத்தியா
பார்த்தியில் சாயி பகவானாய் - ஆர்த்தியைப்
பெற்று அருமையாய்ப் பேறுடன் ஓம்தந்து
ஆற்றும் அருளே அமுது.

## வெங்கப்பா ராஜா
## நேரிசை வெண்பா

வெங்கப்பா ராஜா விளங்கிடத் தந்தையாய்த்
தங்கமான ஈஸ்வரம்மா தாயாராய் - எங்குமே
ஓங்கிடும் சாயிபாபா ஒப்பிலாத் தெய்வத்தை
ஏங்குவோம் பார்க்கவே ஈங்கு.



## சத்தியா பாலனாக
## நேரிசை வெண்பா

சத்தியா பாலனாய்ச் சாதனை செய்தாரே!
நித்தமும் லீலை நிகழ்த்தியே - முத்திடும்
புன்னகை கொண்டு புவியினில் வந்துதித்த
கண்ணன் பிறப்பதுவே காண்.

## பதினான்கு வந்திட
## நேரிசை வெண்பா

பதினான்கு வந்திடப் பாசத்தை விட்டு
முதிர்ந்திடும் ஞானத்தால் முற்றும் - மதியொளியார்
பக்தரை நோக்கிப் பவனியாய் வந்தாரே
சக்திமிகு சாயிபாபா சார்ந்து.

## எல்லோரும் பர்த்திக்கு
## இன்னிசை வெண்பா

எல்லோரும் பர்த்திக்கு என்னுடன் வாருங்கள்
பல்லோரும் பின்தொடரப் பக்தர்கள் ஆகினரே
அல்லல்கள் நீக்கி அடியாரைக் காக்கிறாரே
வல்லமையால் பாபாவே வாய்ப்பு.



# சாயி அவதாரப் பெருமை

## வல்லவர் சாயிபாபா
## இன்னிசைக் கலி வெண்பா

கமலமலர் போலாய்க் கலியுகத்தில் உய்து
நமக்கு அருளவே நாதனாய் வந்தார்
சிவசக்தி ரூபன் சிறப்பினைச் செய்து
எவர்க்கும் உதவும் இறைவனாய் ஆகிறார்
அன்பே உருவம் அழகுறத் தாங்கியே
இன்முகம் கொண்டு இலங்கிட நின்றார்
பிரசங்கம் செய்துமே போதனை செய்து
கரத்தைப் பிடித்துக் கருணையாய்க் காத்துமே
மானிட சேவைக்காய் மக்களிடம் செல்கின்ற
வானில் பெரிதான வாய்ப்பான தெய்வமே!
நல்லதைச் சொல்லிடும் நண்பனாய் நின்றிடும்
வல்லவர் சாயிபாபா வாஞ்சை முகத்தாரே!
கோடியாய்ப் பக்தரைக் கொண்டிடும் ஈசனாய்
தேடியே சென்றுநீ தேற்று.

## எங்கள் பகவானார்
## நேரிசை வெண்பா

எந்தன் பிறப்பினை என்னுடைய அன்னையை
முந்தியே தீர்மானம் முற்றாகத் - தந்தேனே
என்றுதான் சொல்வாரே எங்கள் பகவானார்
உன்றாள் பணிவோம் உவந்து.

## கண்ணனாய் வந்துதித்த
## இன்னிசை வெண்பா

கண்ணனாய் வந்துதித்த கார்மேகக் கிட்டினரும்
மண்ணுலகை மலைப்பித்த மாண்பான சீரடியும்
விண்ணுலகு தந்த வியப்பான பாபாவின்
திண்ணமாம் முற்பிறப்பே தீர்ப்பு.

## தரிசனம் காண
## நேரிசை வெண்பா

தரிசனம் காணத் தலத்திற்குச் சென்று
வரிசையில் நின்று வணங்கி - அரியதாம்
காட்சியைக் கண்டு களிக்கப் பகவானை
நாட்டமுடன் தேடினோம் நாம்.

## மனிதமாம் சேவையை
## நேரிசை வெண்பா

மனிதமாம் சேவையை மாண்புடன் செய்தே
புனிதமாய்ப் பாதை புகட்டி - மனிதர்கள்
நல்ல வழியில் நலமாக வாழ்ந்திடவே
வல்லசாயி தந்த வழி.



## சத்தியம் தர்மமும்
## நேரிசை வெண்பா

சத்தியம் தர்மமும் சாந்தி பிரேமையும்
உத்தம அன்பால் உவகையும் -- நித்தம்
உதித்துமே வாழ்வினை உந்திடும் சக்தி
மதிபோல் ஒளிர்ந்திடும் மாண்பு

## சிறுவரின் வாழ்வு
## நேரிசை வெண்பா

புதியதாய்ப் பூங்காவைப் பூமியிற் காண
உதித்த பகவானாய் ஊட்டிப் - பதியில்
சிறுவரின் வாழ்வையே செம்மைப் படுத்தி
உறுதி கொடுப்பார் உவந்து.

## கலியுகத்தில் சாயி
## நேரிசை வெண்பா

கலியுகத்தில் சாயி கடவுளாய் வந்தே
வலிந்திடும் தீமையை வெட்டியே - பாலினுள்
நீர்போல் மனத்தில் நிறைவாய் அமர்ந்திடுவார்
சார்பாக நின்றிடும் சால்பு.



## பகவான் அவதாரர்
### நேரிசை வெண்பா

பகவான் அவதாரர் பாரினில் தெய்வம்
முகத்தில் ஒளியை முழுதாய் - அகமும்
மகிழ அரியதோர் மானிடர் சேவையில்
அகிலமே காத்தார் அரிது.

## என்றும் குருவாய்
### நேரிசை வெண்பா

கருணைகொள் வள்ளலாய் காருண்யத் தெய்வம்
வருகின்ற பக்தரின் வாழ்வில் - மெருகூட்டி
இன்புடன் அன்பில் இலங்கியே எங்களுக்கு
என்றும் குருவாய் இனிது.

## சேவையின் மூலம்
### நேரிசை வெண்பா

சேவையின் மூலம் செயற்றிறன் காட்டிச்
சுவைபட வாழ்தலைச் சொல்லி - அவையில்
அமர்ந்து கரங்கள் அசைத்து அருளை
எமக்குத் தருவாரே ஏற்று.

## சித்ரா வநதி

### நேரிசை வெண்பா

சித்ரா வநதி சிறப்புறப் பர்த்தியிலே
சித்தராய் நின்றிடும் சீரியராம் - வித்தகரே
முத்தியைப் பெற்றிட முன்வழி காட்டியே
பத்தரைக் காப்பார் பரிந்து.

## நத்தாரில்

### நேரிசை வெண்பா

நத்தாரில் வெண்ணுடையில் நாயகனாய் நின்றுமே
உத்தம சர்வமத உண்மையைப் - பத்தருக்கு
அத்தன் அமுதமாய் ஆனந்தம் என்றெல்லாம்
சொத்தாக நிற்பதுவே சொல்.

## நித்தமும் நிற்பாரே

### நேரிசை வெண்பா

பகவானாய்ச் சத்யசாயி பக்தரைக் காத்தே
மிகவாய் அருள்நல்கி மேலாய் - நிகரில்லா
இத்துணை நண்பனாய் என்றுமே அன்புடன்
நித்தமும் நிற்பாரே நீடு.

## கோடியாய்ப் பக்தரை
## நேரிசை வெண்பா

**கோடியாய்ப் பக்தரைக் கொண்டிடும் கோபாலன்**
**தேடியே சென்றுமே தேற்றிடுவார் - கூடிடும்**
**கூட்டம் மகிழக் குறைகளைத் தீர்த்துமே**
**ஊட்டலைச் செய்வார் உயர்ந்து.**

## அற்புத ஆண்டவனாய்
## நேரிசை வெண்பா

**மானிடச் சேவை மகத்தாகச் செய்தே**
**இனிய மனிதராய் எங்கள் - புனிதரே**
**வற்றாக் கடவுளாய் வானளவில் ஓங்குகிறார்**
**அற்புத ஆண்டவனாய் ஆர்த்து.**

## கோபாலா
## நேரிசை வெண்பா

**கோபாலா நந்தன கோகுல பாலனாய்**
**பாபாவே நித்தமும் பாங்காய் - அபாரமாய்ச்**
**சக்தியைக் கொண்ட சியாமள நாதனே**
**பக்தரைக் காத்திடுவார் பார்.**



## எங்களில் பாபா
## இன்னிசை வெண்பா

எங்களில் பாபா இருப்பாரே என்றுமே
மங்கா ஒளியுடன் மாண்புடன் ஆத்மாவில்
எங்குமே தோன்றும் இயல்பினைக் கொண்டவரால்
ஓங்கும் அருளமுதம் உண்டு.



## சித்தராம் சாயி
## நேரிசை வெண்பா


எப்போதும் காத்திட எங்கும் இருப்பாரே
இப்பாபா உள்ளாரே இப்புவியில் - தப்பாமல்
பத்தரைக் காத்துமே பார்த்து மகிழ்வதே
சித்தராம் சாயி சிறப்பு.

## அற்புதன்
## நேரிசை வெண்பா

வானத்தில் வந்த வளர்மதி போலாக
ஆனமுகம் கொண்டவர் அற்புதன் - ஞானத்தைப்
பெற்று அறிவினைப் பேறாக்கி வாழ்மனிதா
ஆற்ற உரைத்தார் அறி.

## சாயீசன்
## இன்னிசை வெண்பா

எல்லோருள் உள்ளானாய் எங்கும் நிறைந்தானாய்
எல்லாம் அறிந்த இறைவனாய்ச் சாயீசன்
பல்லோரின் வாழ்வினில் பாங்கினைத் தந்தாரே
அல்லல் அறுப்பாரே ஆங்கு.



## கோபாலன் சாயி
## இன்னிசை வெண்பா

நெறியைப் பிறழ்ந்தாரை நேச நெறிக்காய்
குறிப்பிடுவார் போதனைகள் கோபாலன் சாயியாம்
மாறிடும் பக்தரினை மாண்புடன் காத்துமே
தேறிடச் செய்வாரே தேர்ந்து.

## பாரினில் தெய்வமே
## சிந்து

பர்த்தியில் பிறந்த - பாபா
   பாரினில் தெய்வமே
ஓர்முறை சீரடியாய் - சிவனின்
   உருவில் வந்தாரே

இன்று வந்தாரே - சாயி
   ஈசனும் சக்தியாய்
இன்னும் வருவாரே - பிரேமசாயி
   ஈடிலாச் சக்தியாக



## நல்லதைச் செய்துமே
## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நல்லதைச் செய்துமே தீதோ புரியற
நாதன் சாயி அருளில் நடந்திடுவம்
வல்லவன் சாயியின் நீதி நெறிகளை
வாழ்வில் ஏற்று வளமாய்ச் செழித்திடுவம்
பல்வகை மானிட சேவை புரிந்துமே
பல்லோர் நாடும் சுடராய் மிளிர்ந்திடுவம்
கல்வியில் கற்றதை நல்ல செயலுடன்
கண்ணாய் எண்ணி முடித்து மகிழ்ந்திடுவம்

## சுந்தர சாயியின்
## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சுந்தர சாயியின் சோதியில் கலந்துமே
சுகமே நாமெல்லாம் வாழ்வோமே
புந்தியைக் கொண்டுமே பக்தியில் நிரம்பியே
பக்தராய் நாளெல்லாம் உயர்வோமே
ஏந்திடும் பணியினை ஏற்றமாய்ச் செய்துமே
எப்பவும் வாழ்வினில் இருப்போமே
உந்திடும் சக்தியாய் சாயிமா ஔிரவே
ஓங்கியே என்றுமே மிளிர்வோமே!



# சாயி போதனைகள்

## மனிதப் பெறுமதிகள் - குறள் வெண்பா

சத்திய சாயி தருமமும் சாந்தியன்பும்
நித்தம் அகிம்சை நிறை.

## நன்மை - குறள் வெண்பா

நன்மையைச் செய்வோமே நன்றாக நாளெல்லாம்
வன்மை புரியாது வாழ்ந்து.

## அன்பு - குறள் வெண்பா

கடவுளை நேசிக்கக் காரியம் ஆக
நடத்தலே அன்புடன் நன்று.

## செயல் - குறள் வெண்பா

செயலின்றிக் கல்வியைச் சேர்ப்பதால் மட்டும்
பயனில்லை யாருக்கும் பார்.

## மானிடச் சேவை - குறள் வெண்பா

மானிடச் சேவை மகத்தாகச் செய்தல்
இனியதெய்வத் தொண்டாக ஏற்பு.

## இறைவன் - குறள் வெண்பா

இதமாய் வணங்குதலே எம்பணியாம் இறைவன்
அதற்காய் விளைச்சலை ஆக்கு.

## உணர்வு - குறள் வெண்பா

சத்தியம் காட்டுவான் சாயி அதனுணர்வே
பத்தனுக்கு ஆகிடும் பாங்கு.

## அன்பு ஒளியாக - குறள் வெண்பா

அன்பினைச் சாயி அரிய ஒளியாக்கி
என்றும் அருள்வார் எமக்கு.

## அமைதியும் பக்தியும் - குறள் வெண்பா

நெஞ்சில் அமைதியும் நேர்த்தியாய்ப் பக்தியும்
வாஞ்சையும் கொண்டே வளர்..

## நம்பிக்கை - குறள் வெண்பா

நம்பிக்கை ஊட்டிட நன்கு வலுவூட்ட
நம்மிடம் பாபாவை நாடு.

## எண்ணமும் செயலும் - குறள் வெண்பா

சொல்லுதல் எண்ணம் செயலெனக் காண்பவை
எல்லாம் இறைவன் எழுத்து.

## வழி நடத்தும் சாயி - குறள் வெண்பா

உன்னை வழிநடத்த உள்ளேன் பயமின்றி
முன்செல்வாய் சாயி முகிழ்ப்பு.

## பக்தியும் செயலும் - குறள் வெண்பா

பக்தியால் மாத்திரம் பற்றாச் செயலுமே
முக்கியம் என்பதே முற்று.

## சேவை - குறள் வெண்பா

சேவையின் மேலாகச் செய்யும் வணக்கம்
எவையுமிலை என்றார் இனிது.

## பஜனையில் அன்பு - குறள் வெண்பா

(அளபெடை)

ஓமெனச் சொல்லியே ஓதும் பஜனையில்
ஆஅரும் பாகிடும் அன்பு.

## அகச்சுத்தி
## இன்னிசைச் சிந்தியல் வெண்பா

அகங்காரம் கொள்ளுதல் ஆபத்து என்று
அகச்சுத்தி செய்திட ஆனவழி சொல்லும்
இகத்தினில் பாபா இனிது.

## பாபாவின் அறிவுரைகள்
## ஒயிற்கும்மி

பகவானின் நாளாந்த பாங்கான சிந்தனைகள்
பாரினில் நாம்ஏற்று வாழவேண்டும்
பாபாவின் அறிவுரைகள்
பூபாலன் நல்வழிகள்
பேறாய் நினைத்து உயர்வோமே!

## ஆன்மீகத்துணை
### ஓரடிக்கும்மி

உங்களின் ஆன்மீகம் மேலோங்க எல்லாமே
ஊட்டிட இருப்பாரே சாயிநாதன்

## பக்தி
### ஓரடிக்கும்மி

உங்களிற் பக்தி இருந்தால் போதுமே
உங்களைப் பார்ப்பார் பர்த்திநாதன்

## பேராசை வேண்டாமே
### சிந்து

பேராசை வேண்டாமே - நமக்கு
பொறாமையும் வேண்டாமே

அன்பே வேண்டுமே - பாபாவின்
அருளே வேண்டுமே

பக்தி வேண்டுமே - பாபாவில்
நேசமும் வேண்டுமே

## உயர்ந்து வாழ்வோமே!
## குறள் வெண் செந்துறை


பார்த்தி நகரில் பதியுற்ற லோலனை
நேர்த்தியாய் நாங்கள் நேசித்து வாழ்வோமே!

எங்களின் கடமையை இனிதே செய்துமே
ஓங்கும் பண்புடன் உயர்ந்து வாழ்வோமே!

என்றும் சாயி எம்முடனே இருப்பார்
நன்றாய் வாழ்ந்திட நல்வழி சொல்வாரே!

## தெய்வமாய் நிற்பாரே!
## இயற்கும்மி

சத்திய சாயிபாபா எப்போதும் எமக்கு
சம்மதமாய் உள்ளார் உதவிடவே
நித்தமும் வழிகாட்டி நீங்கா துதவிடும்
நிலையான தெய்வமாய் நிற்பாரே!



# சாயி விந்தைகள்

## நாதன் பகவான்
## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சத்தியாவாய் தோன்றி புட்டபர்த்தி அங்கு
சரித்திரமும் காணாத் தெய்வமாய்
நித்தமுமே நின்று அன்புருகச் சேவை
நல்குகின்ற நாதன் பகவான்
தத்துவங்கள் கூறிப் பிரசங்கமும் செய்து
தாங்குகின்ற சாயித் திருவே
பத்தரினைக் காத்துப் பரிசுகளும் தந்து
புதுமைகளும் பேறாய்ச் செய்வரே!

## ஸ்ரீ சத்திய சாயியின் பவனி
## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

எத்துணை விந்தையைப் பதியினில் செய்துமே
எங்களுடன் பாபா இருக்கின்றார்
நித்தமும் வந்துமே தரிசனம் தந்துமே
நேசமுடன் சாயி வாழ்கின்றார்
எத்திசை சென்றுமே அற்புதம் புரிந்துமே
ஏற்றமுடன் தெய்வம் ஒளிர்கின்றார்
பத்தரைக் காத்துமே பக்கமாய் நின்றுமே
பரிவுடனே பவனி வருகிறாரே!



## பார்த்தது கனவே
### நேரிசை ஆசிரியப்பா

பக்தரை நோக்கிப் பரிவுறும் பாபா
சக்தியும் சிவமும் சார்ந்த ரூபா
பக்தர் கோடி பாரினில் கொண்டார்
பக்தனாய் இவன்யான் பாக்கியம் பெற்றேன்
விக்ன ரூபன் விளங்கவே கனவில்
பக்கமாய் என்னை அழைத்தார் பார்த்துப்
பக்குவ நடையில் பக்கமாய் வந்து
தூக்கிய கரத்தைத் தேடித் தொட்டு
முக்கிய மந்திரம் மெல்லச் சொன்னார்
சிக்கித் தவித்தேன் சீராய்ப் புரியலை
திக்காடி முழித்தே திணறினேன்
பக்தன் இவன்யான்! பார்த்தது கனவோ!



## கனவு நிகழ்வானதே
## நேரிசை ஆசிரியப்பா

பகலும் இரவும் பாரா தொருநாள்
பகவான் நோக்கிப் பயணம் செய்தேன்
அகமே விரிய புறமும் கூம்ப
பகவான் இடமாம் பிருந்தா வனமாம்
மகத்துவ தலத்தை மகிழ்வுடன் அடைந்தேன்
காகம் கரையக் காலை விடிய
தாகம் தீரத் தரிசனம் தேடி
பகவான் வரவைப் பார்த்துப் பணிவுடன்
அகத்தால் துதிக்கும் அடியார் கூட
பகட்டு வாழ்வைப் பையிலே கட்டி
புகழை மறந்து புண்ணியந் தேடி
அகத்தில் சாயி அண்ணலைத் துதித்தேன்
சிவனும் சக்தியும் சேர்ந்த சாயி
பகவான் பாபா பக்கமாய் வந்தார்
பகவான் லீலைகள் பலதும் புரிந்தார்
முகமது மலர முற்றும் துறந்து
பகவான் சாயி பார்த்து மகிழ்ந்தேன்
தாகமும் தணியத் தர்சனம் பெற்றேன்
பகலில் தர்சனம் இரவிற் பிரார்த்தனை
பகவான் தலத்தில் நாட்கள் கழிந்தன
அகமே துதிக்க அன்றைய நாளும்
பகவான் வரவைப் பார்த்தே இருக்க
அகத்தால் பக்தர் ஆடிக் கொள்ள
பகவான் சாயி மெல்ல வந்தார்
முகமது சிரித்து முழுதாய்ப் பார்த்து
அகமது நிறையவே அடியேன் கரமதை
பகவான் அழுத்தியே பரவசம் ஊட்டினார்
பகவான் ஒளியைப் பார்த்து மகிழ்ந்தேன்
அகமும் குளிர்ந்தே ஆர்ப்ப ரித்தேன்
பக்தன் நானும் பாக்கியம் பெற்றேன்
பகவான் கரத்தால் பரிசுடன்
**பகலிலே கனவு பலித்தது நிஜமே!**




## லீலைகள்
## நேரிசைச் சிந்தியல் வெண்பா

நாள்தோறும் எங்கும் நிகழ்கின்ற லீலைகள்
கேள்வியுறல் அல்லது காணுதல் - வள்ளலாம்
சாயியின் அன்புக்குச் சான்று.

## சாயியருள்
## நேரிசை வெண்பா

வெள்ளத்தில் சிக்கியோகி வேண்டலைச் செய்கையில்
வள்ளம்போல் சாயியருள் வாரியே - அள்ளிக்
கரைசேர்த்த அன்புக் கடவுள் ஆகித்
தரையிருந்து காத்தார் தனி.



## பார்த்தியில் சாயி
## நேரிசை வெண்பா

பார்த்தியில் சாயி படம்பிடிக்கப் பக்தனவன்
ஓர்முறை ஆசையாய் ஓடிவர - சீர்செய்து
வெற்றுக் கதிரையில் மாயம் வருமாறு
அற்புதம் செய்தாரே அன்று.

## பன்னிரண்டு பக்தரிடம்
## நேரிசை வெண்பா

பன்னிரண்டு பக்தரிடம் பாபா வருவதாய்
இன்புறக் கூறிவிட்டு எங்குமில்லை - அன்றங்கே
மாலையை வீழ்த்தியே மாயத்தைச் செய்துமே
வேலையோ சாயியின் வீறு.



## இனிதாய் அருளை
## இன்னிசை வெண்பா

மனிதர்கள் தம்தெய்வம் வேண்டி வணங்க
கனிந்த முகத்தோடு காட்சியில் தோன்றி
இனிதாய் அருளை இறைஞ்சிய சாயி
மனிதரில் வாழ்வது மாண்பு.

## பாரில் புகழுற
## நேரிசை வெண்பா

பாம்போடும் பர்த்தியைப் பாரில் புகழுற
ஓம்கூறும் சொர்க்கமாய் ஒப்பிலாது - எம்மதமும்
ஒன்றென சர்வமதம் ஓங்க வளர்த்திடும்
உன்னத தெய்வமாய் உண்டு.

## இறைவனின் லீலைகள்
## நேரிசை வெண்பா

இவ்விடம் சொன்ன இறைவனின் லீலைகள்
கவ்விய ஓர்சில காட்சிகளே - இவ்வகையாய்
எத்தனை அற்புதமும் எண்ணற்ற விந்தையும்
சித்தமாம் பாபா சிறப்பு.



## சத்திய சாயி
## நிலைமண்டில ஆசிரியப்பா

சத்திய சாயி தரணியில் வந்தே
நித்தம் கையினை நீட்டி அசைத்தே
சத்தம் இன்றிச் சாதனை செய்தே
நித்திய போதனை நீண்டு செய்தே
தத்துவம் பலதை தந்து கொண்டே
பத்தியும் முத்தியும் பக்தருக் களித்தே
சித்தரில் சிறந்த சீரிய வித்தராய்
சத்திய சாயி சரித்திரம் படைப்பதே
நித்தம் வாழ்வில் நிம்மதி தருதுமே!

## நிர்மலன் மாமுகம் கண்டுமே
## கட்டளைக் கலிப்பா

பக்தர் சாயியைப் பார்த்திட பர்த்தியில்
  பற்றாய்ச் சென்றுமே சேர்ந்ததும் உம்மிடம்
சிக்கிக் கர்வமும் அற்றுமே பேச்சினைச்
  சிந்தும் ஆற்றலும் அன்றியே நிற்றலும்
துக்கம் இன்றியே உங்களின் ஓம்தனில்
  தூங்கி நித்தமும் நிம்மதி காணலும்
அக்கம் பார்க்கவும் ஆசையும் அற்றுமே
  ஆங்கு நிர்மலன் மாமுகம் கண்டுமே.



# வாழ்த்து

கவியாக்கச் செய்திட்ட கடவுளே உமக்கு வாழ்த்து சொல்கிறேன்
புவியினில் நூலிற்காய் உதவிய யாவர்க்கும் வாழ்த்து சொல்கிறேன்
மரபு முறையில் மாண்பான பகவான் புகழைச் சொல்லி வைத்தேன்
வரமாய் இதனை வாழ்வில் நான் பெற்றேன் என்பேன்
சாயி அமுதம் தவழட்டும்! சாந்தி நிலவச் செய்யட்டும்!
வாழ்க சாயிபுகழ்! வளர்க சாயி அருள்!




நன்றி : சாயித்திரேன்

# நன்றி நவிலல்

## நன்றி கூறுகின்றேன்

பந்தியில் முந்தச் செய்த தந்தைக்கு
பாசமுடன் நன்றி கூறுகின்றேன்
ஏந்தியே அன்புடன் எழுத்துலகு காட்டிய
என்தாய்க்கு நன்றி கூறுகின்றேன்
இல்லறத் துணையாக என்றுமே அன்பான
என்னவளுக்கு நன்றி கூறுகின்றேன்
பல்வகையில் உந்தும் பாசமிகு பிள்ளைகட்கு
பற்றுடனே நன்றி கூறுகின்றேன்
அண்ணன் தம்பிமார் தங்கைமார் குடும்பத்தினர்க்கு
அன்போடு நன்றி கூறுகின்றேன்
பண்பான மாமனார் மாமியார் பெற்றோராய்
பந்தமுடன் நன்றி கூறுகின்றேன்
தாய்வழி இனத்தோர் தந்தைவழி உறவார்
தயவுடன் நன்றி கூறுகின்றேன்
சாய்பக்தர் பாலவிகாஸ் பிள்ளைகள் இளைஞர்க்கு
சாந்தமுடன் நன்றி கூறுகின்றேன்
மனைவிவழியில் மைத்துனர்கள் மைத்துனி குடும்பத்தினர்க்கு
மனம்திறந்து நன்றி கூறுகின்றேன்
மனைவியின் இனத்தோர் உற்றார் நண்பர்க்கும்
மகிழ்வுடன் நன்றி கூறுகின்றேன்
நண்பர்கள் குடும்பத்தார் ஊரார்க்கும் நானறிந்தோர்க்கும்
நட்புடன் நன்றி கூறுகின்றேன்
வண்ணமிடும் குழந்தைகள் எங்கள் உறவுகட்கும்
வாஞ்சையுடன் நன்றி கூறுகின்றேன்

பழுத்த அறிஞர்கள் கற்பித்த ஆசிரியர்க்கும்
பண்போடு நன்றி கூறுகின்றேன்
எழுத்துலக நண்பர்கள் என்னை உந்துவோர்க்கும்
இன்பமுடன் நன்றி கூறுகின்றேன்
தொழில்சார் நண்பர்கள் முதியோர் இளையோர்க்கும்
தோழமையுடன் நன்றி கூறுகின்றேன்
எழிலான ஆன்மீகம் என்வாழ்வில் காட்டியோர்க்கு
ஏற்றமுடன் நன்றி கூறுகின்றேன்
என்நூலின் வாசகர்கள் வாழ்த்தியோர் கருத்தளிப்போர்க்கு
இணக்கமுடன் நன்றி கூறுகின்றேன்
என்னை வழிகாட்டும் எந்தன் சாய்பாபாவிற்கு
இறைஞ்சி நன்றி கூறுகின்றேன்





நன்றி : சாயி சகோதரர் தேசாய்

தனக்காக வாழாது பிறர்க்காய் வாழ்ந்து அமரரான என் தந்தையாருக்கு அவர் நினைவில் என் கவிதை!

## அருமைத் தந்தையர்
## நிலைமண்டில ஆசிரியப்பா

அருமைத் தந்தையர் அரிய சேவையர்
தருமம் செய்வதில் தலைமையர் வல்லவர்
கருமம் செய்வதில் கண்ணியம் காத்தவர்
அருமருந் தானவர் கிராம சேவையர்
இருளிலும் ஒளியிலும் கடமை செய்வார்
இருண்ட வாழ்விலும் ஒளியைத் தேடுவார்
எருது மீதும் இரக்கம் கொள்வார்
வருவோர் மகிழ விருந்து கொடுப்பார்
குருமன் குஞ்சிலும் அன்பு காட்டுவார்
மருட்சி கொள்ளார் மதியால் வெல்வார்
பருத்திச் செடியும் பார்த்து வளர்ப்பார்
செருப்பில் லாது முள்ளிலும் நடப்பார்
பருப்புக் கொடுத்துப் பசியைத் தீர்ப்பார்
கருப்பு இருட்டிலும் கடமை செய்வார்
கருமாச்சி கடவுளில் கனிந்த அன்பர்
இருமல் காய்ச்சல் எதிலும் படுக்கார்
தெருவில் இறங்கித் தேடி உதவுவார்
எருவன் வைரவர் என்றும் தொழுவார்
கருப்பன் கந்தன் யாருமே நண்பர்
பருவம் அறிந்து பயிரைச் செய்வார்
கருவம் அற்றுக் கண்ணியம் காத்தார்
கொடிய நோயால் குறுகினார் வாழ்வில்
அருமைப் புதல்வருக் அறிவை ஊட்டினார்
அருமைத் தந்தையர் அவரே அவரே!
ஒருக்க முடியா ஒர்ப்புத் தந்தைக்கு
இருந்தே உதவும் என்றும் பாபாவே!

ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்
ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம் ஓம் ஸ்ரீ சாயிராம்



முன்னட்டைச்சித்திரம் : நன்றி சயனிகா

# குறிப்புக்கள்

# குறிப்புக்கள்

இறை பக்தி நிறைந்திருக்கும் அழகான தமிழ் வரிகள், கவிதையால் மட்டுமே எழுப்ப முடிகின்ற ஓர் அற்புதமான ஒலியுடன் பிணைந்து, இந்நூலில்.செதுக்கப்பட்டிருக்கின்றது

“உங்களுடைய இருதயங்களில் அன்பு என்னும் ஒளியை ஏற்றி வைக்க வந்திருக்கின்றேன். அது நாளுக்கு நாள் அதிக மெருகுடன் பரிணமிக்கும்படி பார்த்துக்கொள்வேன்.“

- பாபா